
# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION




OCTOBER—1955

CONNEMARA PUBLIC LIBRARY 6 AUG 1956 MADRAS



பேரறிஞர் மறைமலையடிகள்

OFFICE OF ... OF BOOKS ... 1955 MADRAS

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94–95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

## ASSOCIATION PUBLISHING HOUSE

### "ARAMBA KALVI OFFICE"

**94-95, New Street, Mannady P. O. Madras-1.**

POST BOX NO. 1818

# "ஆரம்பக்கல்வி" இனாம்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில், எமது "**புதுமுறை சங்க வாசகங்களை**" அல்லது "**வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை**" பாட புத்தகங்களாக, அல்லது ரூ. 50–க்குக் குறையாமல் இதர பாட புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட், பஞ்சாயத்து, லேபர் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, "**ஆரம்பக்கல்வி**" மாதப் பத்திரிகையை இனாமாக மாதாமாதம் அனுப்பிவைக்கப்படும். மாதிரிப் பிரதிகள் வேண்டுபவர்கள் கீழ்க் குறித்துள்ள தொகைக்குத் தபால் ஸ்டாம்புகளை (Postal Stamps) வாங்கிக் கவரில் வைத்து அல்லது மாதிரிப் பிரதிகளுக்கு அனுப்பவேண்டிய தொகை ஒரு ரூபாய்க்கு மேற்பட்டிருந்தால் அந்தத் தொகையை M .O. மூலம் அனுப்பவும்.

## புதுமுறை சங்க வாசகங்கள்

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 4 0 | 8 | 4–5–'55 |
| இரண்டாம் வகுப்பு | 0 5 0 | 22 | 19–5–'54 |
| மூன்றாம் வகுப்பு | 0 7 0 | 23 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 8 0 | 23 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 9 0 | 23 | 19–5–'54 |

இந்த ஐந்து புத்தகங்கள் மட்டும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 1–0–0 அனுப்பவும்.

# ஆரம்பக்கல்வி




ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்

முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா

| மலர் 16 | அக்டோபர் 1955 | இதழ் 10 |
|---|---|---|

# மொழிவழி அரசு!
# புதுவாழ்வின் முரசு!

அதிருப்தி—பல இடங்களில்!

ஆத்திரம்—சில வட்டாரங்களில்!

கண்டன முழக்கம்—பல மாநிலங்களில்!

எதிர்ப்பு ஊர்வலம்—மராட்டியப் பகுதியில்!

வேதனையும் வருத்தமும்—ஆந்திர மக்களிடை

குமுறலும் கொந்தளிப்பும்—செந்தமிழ் நாட்டவரிடை!

ஆவேச அலைகள்—சீக்கியர் உள்ளத்தில்!

இத்தனை உணர்ச்சிகளையும் ஒருங்கே கிளப்பியிருக்கிறது பசில் அலி குழுவின் அறிக்கை.

இந்தியாவில் உள்ள பல்வேறு ராஜ்யங்களை எப்படி மாற்றியமைப்பது என்பதைப்பற்றி ஆராய்ந்து அறிந்து ஒரு முடிவைக் கூறுவதற்காக, இந்தக் குழு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, இந்திய அரசாங்கத்தால் நிறுவப்பட்டது.

சென்ற இரண்டாண்டுக் காலமாக இந்தக் குழுவினர் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்தனர். பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளைக் கண்டனர். நூற்றுக்கணக்கான சங்கங்களின் கருத்துக்களை அறிந்தனர். ஆயிரக்கணக்கான மகஜர்களை அன்போடு பெற்றனர். பல்வேறு மொழியினரின் பல்வேறு கருத்துக்களையும் அறிந்தனர்.

இவ்வளவு ஆராய்ச்சிக்கும் அலைச்சலுக்கும் பிறகு பிறந்திருக்கிறது, அறிக்கை.

அந்த அறிக்கைதான், வேதனையையும், வருத்தத்தையும், ஆவேசத்தையும், ஆத்திரத்தையும் நாடெங்கிலும் கிளப்பியிருக்கிறது.

அறிக்கையின் விளைவாக இப்படிப்பட்ட விபரீதங்களெல்லாம் புறப்பட்டிருக்கின்றன என்றால், அதற்குக் காரணம், அறிக்கையைத் தயாரித்த குழுவினர், மொழிவழி அரசுப் பிரச்னையில் ஒரு தெளிவான கொள்கையையோ, ஒரு திட்டமான முடிவையோ கொண்டிராததுதான்.

மொழிவழி அரசு தேவையா என்கிற கேள்விக்கு, ஆமாம் தேவைதான் என்று விடை கூறுகின்றன அறிக்கையில் சில பகுதிகள்.

இல்லை — தேவையில்லை — என்று பதில் பேசுகின்றன அறிக்கையின் வேறு சில பகுதிகள்.

மொழிவழி அரசு அமைவதால் நன்மை உண்டு என்று முரசு கொட்டுகின்றன அறிக்கையின் சில வாசகங்கள்.

ஐயகோ! அதைவிட ஆபத்து வேறு உண்டோ? மொழிவழி அரசு கூடாது கூடாது என்று அழுத்தந் திருத்தமாகத் தெரிவிக்கின்றன அறிக்கையின் வேறு சில வாசகங்கள்.

அறிக்கையிலே இந்தக் குழப்பம் இருக்கிறது. எனவேதான் அறிக்கையின் ,விளைவாக, நாட்டிலேயும் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது.

* * *

இந்தியாவில் தற்போது உள்ள மாகாணங்களின் எல்லைக்கோடுகள், பெரும்பாலும் பிரிட்டிஷாரால் கிழிக்கப்பட்டவை.

அவர்கள், இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்தபோது, தங்களுடைய ஆதிக்கம் இந்த நாட்டில் நிலைப்பதற்கு எது வசதியான முறையோ அந்த முறைப்படி மாகாணங்களை அமைத்தார்களே தவிர, மக்களுக்கு நன்மை பயக்கும் முறை எது என்பதை அறிந்து அந்த முறைப்படி அமைக்கவில்லை.

மக்களுக்கு நன்மை பயக்கும் முறையில் அமைக்காதது மட்டுமல்ல; மக்களுக்குத் தீமை பயக்கும் முறையிலேயே பெரும்பாலும் மாகாணங்களை அமைத்தார்கள்.

ஒரே மொழியைப் பேசும் மக்கள் அனைவரும் ஒரே மாகாணத்தில் அமைந்துவிட்டால், அவர்களுக்குள் கட்டுப்பாடும் ஒற்றுமை உணர்ச்சியும் வளர்ந்துவிடும்—வளர்ந்துவிட்டால் அனைவரும் ஒன்றாகத் திரண்டு அந்நிய ஆதிக்கத்தை விரட்டியடிப்பர் என்பதை அறிந்த பிரிட்டிஷார், ஒரே மொழியைப் பேசும் மக்களைப் பிரித்துப் பிரித்துப் பல்வேறு மாகாணங்களில் இருக்கும்படி செய்துவிட்டனர்.

இந்தப் பிரித்தாளும் தந்திரத்தின் காரணமாகத்தான், கன்னடம் என்னும் ஒரே மொழியைப் பேசும் மக்களில் ஒரு சாரார் மைசூரிலும், வேறொரு சாரார் சென்னை மாகாணத்திலும், மற்றொரு சாரார் ஐதராபாத்திலும், இன்னொரு சாரார் மத்தியப் பிரதேசத்திலுமாகச் சிதறுண்டு கிடக்கின்றனர்.

இதை ஏகாதிபத்திய முறையின் காரணமாகத்தான், மராட்டிய இனத்தவரிலே ஒரு பகுதியினர் பம்பாய் ராஜ்யத்திலும், மற்றொரு பகுதியினர் மத்தியப் பிரதேச ராஜ்யத்திலும், இன்னொரு பகுதியினர் ஐதராபாத்திலும் வாழ்ந்து வருகின்றனர்.

இப்படியெல்லாம் ஒரே மொழினரைப் பிரித்துப் பிரித்துப் பல்வேறு மாகாணங்களில் இருக்கும்படி செய்தது மட்டுமல்ல, ஒரே மாகாணத்தில் பல்வேறு மொழியினரை இருக்கும்படியும் செய்தனர் பிரிட்டிஷார்.

ஒரே மாகாணத்தில் பல்வேறு மொழியினரும் இருப்பாராயின், அவர்களுக்குள் பிணக்கும் பகையும் மூண்டபடி இருக்கும்— எனவே அவர்கள் ஒன்று சேரமாட்டார்கள் என்பது, பிரிட்டிஷா ரின் கருத்தாக இருந்து வந்தது.

இந்த உண்மைகளையெல்லாம் நன்குக அறிந்த இந்திய தேசியத் தலைவர்கள், ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்னமே, அமைந்தே தீரவேண்டும் மொழிவழி அரசு என்று முழக்கமிடலா யினர்.

தனித்தனி மொழி பேசுபவர்கள், தனித்தனி மாகாணமாக அமைந்தால்தான், அவரவர்களுடைய மொழி முழு வளர்ச்சி அடை யும் என்பதை அந்தத் தலைவர்கள் தெளிவாக விளக்கிக் காட்டினர்.

மொழியின் அடிப்படையின்தால் கலை வளர்கிறது. கலையின் அடிப்படையில்தான் நாகரிகம் வளர்கிறது. ஆகவே மொழியின் அடிப்படையில் மாகாணங்களை அமைப்பதே முறை என்பதை காங் கிரஸ் கட்சி தெள்ளத் தெளிவாக விளக்கி வந்தது.

ஏறத்தாழ 1920-ம் ஆண்டிலேயே காங்கிரஸ், மொழிவழி அரசுகள் அமைப்பதே தன்னுடைய இலட்சியம் என்பதை, உலகுக்கு அறிவித்துவிட்டது.

காங்கிரஸ் கட்சியின் மாகாண அமைப்புகளைப் பொறுத்தவரை யில் மொழியை அடிப்படையாக வைத்து, அந்தக் காலத்திலேயே மாகாணங்கள் மாற்றி அமைக்கப்பட்டு விட்டன.

எடுத்துக்காட்டாகத் தெரிவிக்க வேண்டுமானால், சென்னை மாகாணக் காங்கிரஸ் கட்சி என்பது நான்காகப் பிரிக்கப்பட்டு, தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கட்சி, கேரள நாட்டுக் காங்கிரஸ் கட்சி, கன்னட நாட்டுக் காங்கிரஸ் கட்சி, ஆந்திர நாட்டுக் காங்கிரஸ் கட்சி என்பவை அமைக்கப்பட்டுவிட்டன.

இந்தியாவுக்கு விடுதலை கிடைத்ததும் செய்யப்பட வேண்டிய முதல் காரியம், மொழியின் அடிப்படையில் மாகாணங்களை மாற்றி அமைப்பதுதான் என்று காந்தியடிகள், பலமுறை தெரிவிக்கலானார்.

காந்தியடிகளும் காங்கிரஸ் கட்சியினரும் மட்டுமல்ல, எல்லா நல்லறிவாளர்களும் எல்லாக் கட்சிகளும், மொழிவழி மாகாண அமைப்பை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டனர்.

1947–ல் இந்தியாவுக்கு விடுதலை கிடைத்தது.

மறு ஆண்டிலேயே, மொழிவழி மாகாண அமைப்பு வேலையை, அதிகார பீடத்தில் அமர்ந்த காங்கிரஸ் கட்சி, முழு மனதுடன் மேற்கொள்ளும் என்று நாடு எதிர்பார்த்தது.

இதிலே, சிக்கல் எதுவும் ஏற்படும் என்று யாருமே எதிர்பார்க்க வில்லை.

மொழிவழி மாகாண அமைப்பு என்பது, காங்கிரஸ் கட்சியே ஒப்புக்கொண்ட திட்டம்.

எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொண்ட திட்டம்.

மக்கள் மன்றத்தால் விரும்பப்படும் திட்டம்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு நிச்சயம் தேவைப்படும் திட்டம்.

மொழிகளின் வளர்ச்சிக்கு அவசியமான திட்டம்.

உத்தமர் காந்தியடிகளின் பேராதரவைப் பெற்ற திட்டம்.

பண்டிதநேரு முதல் அன்பர் ஆச்சாரியார் வரையில் அத்தனைக் காங்கிரஸ்காரர்களாலும் ஆயிரமாயிரம் முறை ஏற்றுக்கொள்ளப் பட்ட திட்டம்.

எனவேதான், விடுதலை விழா முடிவடைந்ததும், அதன் அடுத்த பகுதியாக, மொழிவழி மாகாண அமைப்புத் திட்டத்தை அரசாங்கம் மேற்கொள்ளும் என்று நாடு எதிர்பார்த்தது.

ஆனால் ஏனோ தெரியவில்லை, விடுதலை கிடைத்ததும், இத்தனை ஆண்டுகளாகத் தாங்களே எழுப்பிவந்த முழக்கத்திற்கு நேர்மாறாக காங்கிரஸ் தலைவர்கள் பேசலாயினர்.

"அமைந்தே ஆகவேண்டும் மொழிவழி மாகாணங்கள்!"

"அமையாத வரையில் ஒருநாளும் ஓயமாட்டோம்!"

"மொழிவழி அமைப்பு எங்கள் பிறப்புரிமை!"

"யார் இந்தப் பிரிட்டிஷார் இதனைத் தடுக்க?"

"மக்களின் உரிமை, மொழிவழி மாகாணங்கள்!"

இப்படியெல்லாம் எந்தக் காங்கிரஸ் தலைவர்கள், விடுதலை கிடைப்பதற்கு முன்னர் பேசிவந்தனரோ அவர்களே, விடுதலைக்குப் பின்னால்,

இப்போதென்ன அவசரம்?

சில ஆண்டுகள் செல்லட்டும்!

கொஞ்ச காலம் ஆகட்டும்!

நிதானமாகக் கவனிக்கலாம்!

யோசித்துப் பார்ப்போம்.

மொழி மட்டுமே முக்கியமல்ல.

வேறு காரணங்களையும் கவனிக்க வேண்டும்.

என்று, இப்படியெல்லாம் பேசத் தொடங்கினர்.

மொழிவழி மாகாணப் பிரிவினைக்காக ஓயாது போராடி வந்தவர்களே, ஆட்சி பீடத்தில் அமர்ந்த பிறகு, அதனை எதிர்த்தும், பழித்தும் பேசத் தொடங்கியது கண்டு, மக்கள் உள்ளம் குமுறியது. அதிருப்தி, அனைத்துத் திசைகளிலிருந்தும் எழுந்தது. ஆத்திரம் வளர்ந்தது.

1947—1948—1949—1950—1951—1952—ஆண்டுகள் ஒவ்வொன்றாக உருண்டன. என்றாலும் மொழிவழி மாகாணங்கள் அமையவில்லை. விரைவில் அமையக்கூடும் என்பதற்கான அறிகுறிகளும் தோன்றவில்லை.

ஆத்திரம் கொண்டெழுந்தனர் ஆந்திர மக்கள். அமைந்தே தீரவேண்டும் ஆந்திரத் தனி மாகாணம் என்று இடியோசை கிளப்பினர். பிறகு பார்ப்போம் என்கிற பேச்சு வேண்டாம், இப்போதே அமையுங்கள் என்று முழக்கம் எழுப்பினர். முழக்கம் மேலும் மேலும் வலுத்தது. வேறு வழியில்லை. இந்திய அரசாங்கம் பணிய வேண்டி வந்தது. 1953 அக்டோபர் திங்களில் ஆந்திர நாடு தனி மாகாணமாக அமைந்தது.

ஆந்திர நாடு தனியாக அமைந்ததைக் கண்டதும், கன்னடர்கள்—கேரளர்கள்—மராட்டியர்கள்—சீக்கியர்கள்—ஒவ்வோர் இனத்தவரும் தனி மாகாண முழக்கத்தைத் தணியாத வேகத்தில் எழுப்பத் தொடங்கினர்.

பிரச்சினை வேக வேகமாக வளர்வதைக் கண்ட இந்திய அரசாங்கம், பிரச்சினையை அலசி ஆராய்ந்து ஒரு முடிவு கூறுவதற்காக பசிங் அலி குழுவை நியமித்தனர்.

அந்தக் குழுவின் அறிக்கைதான் இப்போது வெளிவந்திருக்கிறது.

மொழியின் அடிப்படையில் மாகாணங்களை அமைப்பதுதான் முறை.

இந்தக் கொள்கையை மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு, இந்தக் கொள்கையின்படி மாகாணங்களைத் திருத்தி அமைக்கப் பசில் அலி குழுவினர் முன்வந்திருந்தால், ஆத்திரமும் அதிருப்தியும் அலை அலையாகத் தோன்றி நாட்டிலே கிளர்ச்சியை உண்டாக்கியிருக்கமாட்டா.

தவறிவிட்டது குழு. எனவேதான் திக்கெட்டிலிருந்தும் கண்டனக் கணைகள் புறப்பட்டபடி இருக்கின்றன.

* * *

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், குழு, மிகப் பெரிய அநீதியை விளைவித்திருக்கிறது.

திருவிதாங்கூரில், ஒன்பது தாலுகாக்கள் தமிழ் மக்களுடையவை.

அந்தத் தாலுகாக்கள் ஒன்பதிலும், தமிழ் மக்களே மிகப் பெரும்பான்மையினராக இருப்பதால், அந்தத் தாலுகாக்கள் ஒன்பதையும் தமிழ்நாட்டோடு சேர்ப்பதே முறை.

ஆனால், குழுவினரோ, ஐந்து தாலுகாக்களை மட்டுமே தமிழ் நாட்டோடு சேர்த்திருக்கின்றனர்.

மிச்சமுள்ள நான்கு தாலுகாக்கள், தேவிகுளம்—பீர்மேடு—சித்தூர்—நெய்யாற்றங்கரை என்பவை ஆகும்.

இந்த நான்கும், இனி அமையவிருக்கிற கேரள மாகாணத்தோடு இருக்கவேண்டும் என்று தீர்ப்பு அளித்திருக்கிறது குழு.

ஏன்? என்ன நியாயம்?

தமிழ் மக்களுக்கு உரிய நான்கு பகுதிகளை மலையாள மக்களுக்குத் தானமாகக் கொடுத்திருப்பது எந்த முறைப்படி ஏற்கத் தக்கது?

கடைசியாக நடைபெற்ற பொதுத் தேர்தலில், இந்த நான்கு பகுதிகளிலும் தமிழ்ப் பிரதிநிதிகள்தான் வெற்றி பெற்றிருக்கின்றனர். கேரளப் பிரதிநிதிகள் தோற்றுப்போயிருக்கின்றனர். இந்தப் பகுதிகள் நான்கும் தமிழர்களுக்கே உரியவை என்பதை நிலைநாட்ட இதைவிட வேறென்ன சான்று தேவை?

ஐதராபாத்திலுள்ள தெலுங்குப் பகுதியை ஆந்திர மாகாணத்தோடு இணைத்துவிடுவதுதான் நியாயம். ஆனால் குழுவினரோ, அந்தப் பகுதிமட்டும் ஐதராபாத் என்கிற பெயரிலேயே ஒரு தனி மாகாணமாகத் தொடர்ந்து இருக்கவேண்டும் என்றும், 1961-ல் நடைபெற இருக்கிற பொதுத் தேர்தலுக்குப் பிறகு, அந்த மாகாணத்துச் சட்டசபையினர் விரும்பினால், அந்த மாகாணத்தை ஆந்திர மாகாணத்தோடு சேர்த்துவிடலாம் என்றும், தெரிவித்திருக்கின்றனர்.

அவசியமே இல்லாத அர்த்தமற்ற ஏற்பாடு இது. தெலுங்கர்களைத் தெலுங்கர்களோடு உடனடியாகச் சேர்த்துவிடுவதுதான் முறை.

* * *

ஐதராபாத்திலுள்ள மராட்டியப் பகுதியைப் பம்பாய் மாகாணத்தோடு இணைத்து, இப்படி இணைக்கப்பட்ட பம்பாய் மாகாணம், பம்பாய் மாகாணமென்ற பெயரிலேயே தொடர்ந்து இருக்கவேண்டும் என்று குழு முடிவு செய்திருக்கிறது. இந்த முடிவும் முற்றிலும் தவறானது.

பம்பாய் மாகாணத்திலுள்ள மராட்டியப் பகுதியைத் தனியாகப் பிரித்து, அதனோடு, ஐதராபாத்திலுள்ள மராட்டியப் பகுதியையும், விதர்ப்பம் என்கிற பெயரில் தனியாக இருக்கவேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டுள்ள மராட்டியப் பகுதியையும் ஒன்றாக இணைத்து, மராட்டிய மாகாணத்தை அமைத்திருக்க வேண்டும்.

அதுபோலவே, பம்பாய் மாகாணத்திலுள்ள குஜராத் பகுதியைத் தனியாகப் பிரித்து குஜராத் மாகாணமாக அமைத்திருக்க வேண்டும்.

இப்படிச் செய்யாமல், மராட்டிய இனத்தவரில், ஒரு பகுதியினர், பம்பாய் மாகாணத்திலும், ஒரு பகுதியினர், விதர்ப்ப மாகாணத்திலும் இருக்கும்படியாகச் சிபார்சு செய்திருப்பது, மராட்டிய இனத்தவருக்கு இழைக்கப்படும் மகத்தான துரோகமாகும்.

* * *

சீக்கிய இனத்தவர்கள் நெடுங்காலமாகவே தங்களுக்கென்று தனி மாகாணம் கேட்டு வருகின்றனர். அந்தக் கோரிக்கை நியாய

மானதாகும். மொழி, இனம், கலை, பண்பாடு, மதம் எல்லாத் துறைகளிலும் சீக்கியர்கள், பஞ்சாபிகளிடமிருந்து மாறுபட்டவர்கள். எனவே பஞ்சாப் வட்டாரத்திலிருந்து அவர்களுடைய பகுதி பிரித்தெடுக்கப்பட்டு தனி மாகாணமாக அமைவதே நியாயம். ஆனால் இந்த நியாயத்தை முற்றிலும் புறக்கணித்திருக்கின்றனர் பசில் அலி குழுவினர்.

* * *

தற்போதுள்ள சென்னை மாகாணத்திலிருந்து, மலபார் ஜில்லாவைப் பிரித்தெடுத்து இனி அமையவிருக்கிற கேரள மாகாணத்தோடு சேர்த்துவிட வேண்டுமென்றும், தென்கன்னட ஜில்லாவையும் அதுபோலவே பிரித்தெடுத்து இனி அமையவிருக்கிற கன்னட மாகாணத்தோடு சேர்த்துவிடவேண்டுமென்றும்; குழு தீர்மானித்திருக்கிறது; இந்த முடிவுகள் முற்றிலும் நியாயமானவை.

ஆனால் இந்த இரு வட்டாரங்களும் பிரிக்கப்பட்ட பிறகு, மிச்சமிருக்கும் சென்னை ராஜ்யம், முற்றிலும் தமிழ் வழங்கும் பகுதியாகும். எனவே அதனைத் தமிழ்நாடு என்று அழைப்பதே முறை.

ஆனால் குழுவினர், சென்னை ராஜ்யம் என்கிற பெயரே தமிழ் நாட்டுக்கு இருக்கும் என்பதுபோலத் தெரிவித்திருக்கின்றனர்.

ஏன் இந்த அநீதி? தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு என்கிற இன்சுவைப் பெயர் இருக்கும்போது, சென்னை ராஜ்யம் என்கிற பொருத்தமற்ற பெயர் ஏன் இருத்தல் வேண்டும்?

* * *

குழுவின் அறிக்கையில் காணப்படும் தவறுகள் இவைமட்டுமே அல்ல. இவைபோலப் பல—பலப்பல உண்டு. எடுத்துக்காட்டுகளாக, இவைகளை மட்டும் தந்திருக்கிறோம்.

இந்தத் தவறுகள் அத்தனையும் அழிக்கப்பட்டு, ஒழுங்கான முறைப்படி இந்திய மாகாணங்கள் அமையவேண்டுமானால்,

**மொழிவழி அரசு!—அதுவே**
**புது வாழ்வுக்கான முரசு!!**

என்கிற உண்மையை அடிப்படையாக வைத்து, அதற்கு ஏற்ற வகையில், குழுவின் அறிக்கை திருத்தி அமைக்கப்படவேண்டும்.

இந்திய அரசாங்கமும், அதன் முதல்வர் பண்டித நேருவும் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய பணி இது.

# அரும்பணி புரிந்த அறிவுக்கூடல்

[ மா. இளஞ்செழியன், எம். ஏ. ]

" தம்பி, உன் பெயரென்ன ?"

" கோபாலகிருஷ்ணன்."

" உன் அண்ணன் பெயர் ?"

" ஆதிவராகன் !"

" உன் அப்பாவின் பெயர் ?"

" தெரியாதா உங்களுக்கு ? ஸ்ரீனிவாச ராகவன் !"

இப்படித்தான் விடைகள் கிடைக்கும்—முப்பது ஆண்டுகளுக்கு முன்னால்—எந்தத் தமிழ்க் குடும்பத்திலே சென்று கேட்டாலும்.

ஆனால் இன்று ?

" உங்கள் பெயரென்ன ?"

" கலையழகன் !"

" உங்கள் அப்பாவின் பெயர் ?"

" அன்புமொழி !"

" உங்கள் தங்கையின் பெயர் ?"

" பூங்கோதை !"

" தம்பிகள் உண்டோ ?"

" உண்டே ! மதியழகன், இளம்வழுதி என்று இருவர் !"

இந்த வகையான விடைகளைத் தரக்கூடிய குடும்பங்கள் ஏராளமாக இருக்கின்றன தமிழகத்தில்.

இன்னமும் எல்லாக் குடும்பங்களிலும் இப்படிப்பட்ட மறுமலர்ச்சி ஏற்பட்டுவிடவில்லை. மிகப் பல குடும்பங்களில் ஏற்பட்டுவிட்டது என்றுகூட சொல்வதற்கில்லை. ஆனால், ஒவ்வோர் ஊரிலேயும், ஒவ்வோர் வீதியிலேயும் இரண்டோர் குடும்பங்களிலாவது இப்படிப்பட்ட இனிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை எவரும் மறுத்திட இயலாது.

நெடுஞ்செழியன், செங்குட்டுவன், அன்பழகன், சிற்றரசு, அறிவழகன், வில்லாளன், இளவழகன், நச்சினார்க்கினியன், முடியரசன், திருமாவளவன்—இப்படிப்பட்ட, தூய, இனிய, சங்ககாலத் தமிழகத்தை நினைப்பூட்டுகின்ற பெயர்கள் தமிழகத்தில் இதுபோது ஏராளம்.

தாமரைக்கண்ணி, அருண்மொழி, மலர்முகத்தம்மை, தேன்மொழி, மலர்விழி, பொற்சிலை, மருவார்குழலி — இப்படிப்பட்ட மகளிர் பெயர்களும் இன்று பலப்பல.

ஆம்! தமிழ் மக்களின் பெயர்கள் தமிழாகத்தான் இருக்க வேண்டுமே தவிர, வடமொழிப் பெயராக இருத்தலாகாது என்கிற தன்மான உணர்ச்சி இன்றைய தினம் தமிழ்நாட்டில் மிக விரைவாகப் பரவி வருகிறது.

தமிழர்களின் பெயர் மட்டுமல்ல, அவர்கள் நடத்திடும் இதழ்களின் பெயர்கள், வாழ்க்கையிற் பயன்படுத்திடும் அன்றாட சொற்கள், இவைகளெல்லாம்கூட, முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால், வடமொழிச் சொற்களாகவே இருந்துவந்தன.

அந்த இழிநிலை, இப்போது, மிகப்பெரிய அளவிற்கு மாறிவிட்டது.

சுதேசமித்திரன், தேசாபிமானி, நவசக்தி, சுதந்தர ஜோதி, குலாலமித்திரன், ஆநந்தபோதினி என்று இந்த விதமாக அந்தக் காலத்தில் தொடங்கப்பட்ட ஏடுகள் பலவற்றின் பெயர்கள் வடமொழிச் சொற்களாகவே இருந்தன. ஆனால் இப்போதோ, தென்றல்—முரசொலி—செங்கோல்—தீச்சுடர் — தமிழ் முழக்கம்—தம்பி—பொன்னி—விடுதலை—தனி அரசு — என்பன போன்ற செந்தமிழ்ச் சொற்கள்தான் ஏடுகளின் பெயர்களாகப் பீடுநடை போடுகின்றன.

அக்கிராசனாதிபதி! அவர் இல்லை இப்போது! 'தலைவர்'தான் இருக்கிறார்.

'உபன்யாசம்' செய்யப்படுவதில்லை இந்தக் காலத்தில். 'சொற்பொழிவு'தான் ஆற்றப்படுகிறது.

'பொக்கிஷதாரை'க் காணமுடிவதில்லை நாம். 'பொருளாளரை'த் தான் காண்கிறோம்.

'வந்தனோபசாரம்' போயே போய்விட்டது. 'நன்றி கூறல்' தான் நாட்டிலே நடமாடுகிறது.

'விவாஹ சுப முகூர்த்தப் பத்திரிகை'யை இப்போது பார்க்க முடிவதில்லை. 'திருமண அழைப்பிதழ்' தான் காணமுடிகிறது.

'நமஸ்காரம்' மடிந்து, 'வணக்கம்' பிறந்துவிட்டது.

'சூசிபத்திரம்' போய், பொருளடக்கம் தோன்றியிருக்கிறது.

'காரியக் கமிட்டி' என்கிற வடசொல் ஆங்கிலக் கூட்டுக் கதம்பம் தொலைந்து, செயற்குழு என்கிற தூய தமிழ் வளர்ந்திருக்கிறது.

மஹா நாடு மாநாடு ஆகி, உற்சவம் திருவிழாவாகி, சங்காந்தி பொங்கலாகி, எங்கெங்கும் தமிழ் இன்ப நடனம் ஆடுகிறது இன்றைய தினம்.

தண்ணீர் தாருங்கள் என்று கேட்பது இழிவு. ஜலம் கொடுங்கோ என்று பேசுவதுதான் பெருமை என்று, தமிழன், இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு எண்ணிக் கொண்டிருந்தான்.

இன்று இல்லை அந்த நிலை. தமிழ் நாட்டில், எங்கு பார்த்தாலும், எதற்கெடுத்தாலும், எந்த நிலையிலேயும், வடமொழியின் ஆதிக்கம்தான் என்று இருந்த நிலை மாறி, தமிழகத்தில், தமிழ்ச் சொற்களுக்கே தனி உரிமை என்கிற இயற்கை நிலை இதுபோது உருவாகி விட்டது.

"நான் தமிழன். என்னுடைய மொழி தமிழ். நான் வாழும் நாடு தமிழகம்" என்கிற நல்லுணர்ச்சி யார் யாருக்கு இருக்கிறதோ அவர்கள் அத்தனைப் பேருடைய உள்ளத்திலேயும் இதுபோது தனித்தமிழ் ஆர்வம் கொழுந்து விட்டெரிகிறது. எல்லாச் சமயங்களிலேயும் தூய தமிழ்ச் சொற்களையே பயன்படுத்துவது என்பது, அவர்களிற் சிலரால் முடியாமல் இருக்கலாம். ஆனால் அப்படிச் செய்ய வேண்டியதுதான் முறை—ஒழுங்கு—திட்டம் என்பதை மறுப்பார் அவர்களில் எவரும் இல்லை.

இந்தத் தூய தமிழ் ஆர்வம் திக்கெட்டும் இன்று பரவியிருக்கிறது என்றால், இதற்குரிய பெருமையில், நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பங்கு, பேரறிஞர் மறைமலையடிகளுக்குத்தான் உண்டு.

ஆம்! அந்த அறிவுச் செம்மல்தான், ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே, தனித் தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

"தமிழனுடைய பெயர்—வட மொழியில்! தமிழனுடைய ஊர்—வட மொழியில்! தமிழனுடைய வாழ்க்கைச் சொற்கள்—

வட மொழியில்! எங்கும் எதற்கும் வட மொழியா? தமிழ் மொழி என்ன திறமை அற்றதா? வளம் இல்லாததா? தெளிவு அமையாததா? ஏன் இந்தக் கொடுமை? எதற்காகத் தமிழுக்கு இந்த அவமானம்!" என்று கொதித்தெழுந்து கேட்டது மறைமலையடிகளாரின் உள்ளம்.

வட மொழியே தேவ மொழி. அந்த மொழியின் சொற்களே ஆண்டவனுக்கு உகந்தவை. அந்தச் சொற்களைக் கலந்து பேசும் தமிழ் நடையே தனிச் சிறப்பு வாய்ந்தது என்பன போன்ற கோமாளிக் கருத்துக்களையே கற்றறிந்த நாவலர்கள் எல்லோரும் பேசிவந்த காலம் அது. அப்படிப்பட்ட காலத்திலேதான், முத்தமிழ் வல்ல மூதறிஞர் மறைமலையடிகளார், தைரியமாக முன்வந்து, தமிழனுடைய பேச்சிலேயும் எழுத்திலேயும் வடசொற் கலப்பு இருத்தலாகாது என்று இடிமுழக்கம் எழுப்பினார். சிறந்த தமிழ்ச் சொற்கள் இருக்கும்போது, அவற்றைப் பயன்படுத்தாமல் மீண்டும் மீண்டும் வட சொற்களையே பயன்படுத்திக் கொண்டிருந்தால், தமிழ்ச் சொற்கள் அழிந்தல்லவா போகும்? என்று அவர் கேட்ட கேள்வியும், தமிழன் தன்னைப் பெற்று வளர்த்த தாய் மொழிக்குச் செய்கிற கைம்மாறு இதுதானு என்று அவர் எழுப்பிய முழக்கமும் உண்மைத் தமிழர் தம் உள்ளத்தையெல்லாம் தொட்டன.

வடசொற் கலப்பு ஆகாது என்று வாயளவிற் பேசியதோடு நின்றுவிடவில்லை அடிகளார். பேச்சைச் செயல்முனைப்படுத்துவதில் உடனடியாக இறங்கினார். சுவாமி வேதாசலம் என்றிருந்த தன் வட சொற் பெயரை மறைமலையடிகள் என்கிற தூய தமிழ்ப் பெயராக மாற்றிக்கொண்டார். 'ஞான சாகரம்' என்கிற வடசொற் பெயருடன் இருந்த தம்முடைய இதழை அறிவுக் கடல் என்று திருத்தியமைத்தார். மரணத்தின்பின் மனிதர் நிலை என்று இருந்த தன் புத்தகம் ஒன்றின் பெயரை இறந்தபின் இருப்பு என்று புதுப்பித்தார்.

" வடசொற் கலப்பே வேண்டாமாம்! சொல்லிவிட்டாரய்யா இந்த சூரர்! இவரால் முடியுமா வடசொற் கலப்பில்லாமல் பேச? இல்லை—முடியுமா என்று கேட்கிறேன்?".

இப்படிப்பட்ட ஏச்சல் பாணங்களையும், கேலிக் குண்டுகளையும் சில விசித்திர சித்தர்களும் விபரீத மனிதர்களும் வீசத்தான் செய்தனர். வீசினால் என்ன? அஞ்சினாரா அடிகள்? தளர்ந்து ஒதுங்கினாரா தன் கொள்கையிலிருந்து? இல்லை. வடசொற் கலப்பில்லாமல் பேச முடியும் என்பதை மெய்ப்பித்துக் காட்டினார். இரண்டு மணி நேரம் மூன்று மணி நேரம் என்று அவர் பலமுறை சொற்பொழிவுகள் ஆற்றியிருக்கிறார். ஒவ்வொரு சொற்பொழிவிலேயும்

வடசொல் ஒன்றைக்கூடக் கலவாமல் மிகச் சிறப்பாக மிக அழகாகப் பேசிக் காட்டினர்.

அதைப் போலவே, அவர் இயற்றிய இருபதுக்கு மேற்பட்ட இன்சுவைப் புத்தகங்களிலேயும் வட சொற்களில் ஒன்றையேனும் கலவாமல் தூய தமிழிலேயே எழுதிக் காட்டினர்.

தனித் தமிழ்க் கொள்கை—அந்தக் கொள்கைக்கு ஏற்ற நேரிய செயல்—இரண்டும் இருந்தன அவரிடம். எனவேதான் தமிழ் நாடெங்கும் அந்தக் கொள்கை இன்றைய தினம் ஏறுநடை போட்டு வீர உலா வருகிறது.

தனித் தமிழ் ஆர்வத்தைத் தமிழ் மக்களுக்கு ஊட்டியதைப் போலவே அந்த அறிஞரேறு ஆற்றிய மற்றோர் அரும்பணி, சங்க இலக்கியங்களின் சிறப்பைத் தமிழரெல்லாம் நன்கறியும்படிச் செய்த தாகும். அடிகளார் இலக்கிய உலகத்தில் நுழைவதற்கு முன்ன ரெல்லாம், இராமாயணமும், பாரதமும், கந்தபுராணமும், திருவிளை யாடலும்தான் தமிழ் இலக்கியங்கள் என்கிற தவறான எண்ணம் மிகப் பலரிடம் பரவியிருந்தது. இத்தகு புராண ஏடுகள் முளைப் பதற்கு மிக நீண்ட காலத்திற்கு முன்னரே மிகச் சிறந்த இலக்கியங் கள் ஒளிவீசிக் கொண்டிருந்தன தமிழகத்தில் என்கிற உண்மையை மிகப் பலர் அறியவில்லை. அறிந்த ஒரு சிலரும் அந்த உண்மையை ஊராருக்கு உரைத்திடும் உறுதியற்ற ஊமைகளாக ஒடுங்கிக் கிடந் தனர்.

இத்தகு வேதனை நிலைமை வளர்ந்துகிடந்த நேரத்தில்தான் அடி களார், முல்லைப்பாட்டையும் பட்டினப் பாலையையும் அகநானூற்றை யும், புறநானூற்றையும், குறுந்தொகைச் சுவையையும், கலித்தொகை இன்பத்தையும் தமிழர்களுக்கு எடுத்தெடுத்துக் காட்டி, இந்தச் சங்ககால ஏடுகளெல்லாம், பிற்காலத்தில் தோன்றிய ராமாயணப் பாரதப் புராண ஏடுகளைவிட எத்துணைச் சிறந்தவை என்பதைத் தமிழகம் நன்கறியும்படிச் செய்தார். சங்க காலப் பூங்காவிற்குள் தமிழகத்தைக் கைபிடித்து இழுத்துச்சென்று, அங்குள்ள ஒவ்வோர் மலரையும் காட்டிக் காட்டி, அதன் நறுமணத்தையும் நல்வனப்பை யும் அழகுபட விளக்கி, தமிழ் இலக்கிய உலகத்தின் தலைசிறந்த பகுதி சங்ககாலப் பகுதிதான் என்பதை, அறிவுபடைத்த அனைவரும் ஒப்புக்கொள்ளும்படி செய்தார் அந்த ஒப்பற்ற பெரும் புலவர் மறை மலையடிகள்.

சங்க காலத்துச் சான்றோர்களைப் போலவே கவிதை தீட்டும் ஆற்றல் தனக்கிருந்தும்கூட, இக்காலத் தமிழகத்தின் உடனடித் தேவை உரைநடை ஏடுகளே என்பதை நன்கறிந்த காரணத்தால்,

அடிகளார், கவிதை ஏடுகள் இரண்டொன்றை மட்டும் தீட்டிவிட்டு, தன்னுடைய பேனாவை உரைநடை உலகத்துக்கே 'தத்துக்' கொடுத்துவிட்டார்.

இலக்கியம்—அறிவியல்—சமயம்—ஆராய்ச்சி முதலிய பல் வேறு துறைகளைப்பற்றி, பற்பல அருமையான புத்தகங்களை அழகான தமிழில் எழுதி அழியாத கருவூலங்களாகத் தமிழகத்துக்கு அளித்துவிட்டுச் சென்றிருக்கிறார் அடிகளார். அவர்தம் ஏடுகள் ஒவ்வொன்றிலேயும் செந்தமிழ் சிரித்து விளையாடும். கருத்துக்கள் நிரம்பிக் கிடக்கும். படிக்கப் படிக்க இன்பம் பிறக்கும். எழிலும் இனிமையும் இணைந்து, தெளிவும் வளமும் செறிந்து, சுவையும் பயனும் மிகுந்தனவாய் விளங்கும் அவர்தம் கருத்துக் கருவூலங்கள்.

மக்கள் நூறாண்டு உயிர் வாழ்வதெப்படி, இறந்தபின் மனிதர் இருப்பு, தொலைவில் உணர்தல், முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவர், அறிவுரைக் கொத்து, முல்லைப் பாட்டு ஆராய்ச்சி, பட்டினப் பாலை ஆராய்ச்சி முதலியன, அவர் தீட்டிய தீஞ்சுவை ஏடுகளில் தலைசிறந் தனவாகும். அவர் இயற்றியுள்ள குமுதவல்லி, கோகிலாம்பாள் கடிதங்கள் ஆகிய இரண்டு நாவல்களும், சாகுந்தலம் என்னும் நாடக நூலும் மிகவும் போற்றத் தக்கவை. 'மாணிக்க வாசகர் கால வரலாறும் ஆராய்ச்சியும்' என்னும் மிகப் பெரிய நூல், அவருடைய ஆராய்ச்சித் திறமைக்கு ஒரு சிறந்த சான்று.

தமிழ் மொழியில் தலைசிறந்த புலமை வாய்ந்தவர் அடிகளார். தமிழ் இலக்கியங்களையெல்லாம் ஐயம் திரிபறக் கற்று, ஆராய்ந்து இன்புற்று, அந்த இன்பத்தை வையகத்துக்கெல்லாம் வாரி வழங்கியவர் அவர். தமிழ் மொழிப் புலமையில், சங்ககாலப் புலவர்களோடு ஒன்றாக வைத்து எண்ணத்தக்க உயர்வும் சிறப்பும் படைத்தவர் அந்த மூதறிஞர். இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த அல்லது வாழும் தமிழர்களில் அவருக்கு இணையான தமிழ்ப் புலமை படைத்தவர் வேறு எவரும் இலர் என்பது, உறுதியினும் உறுதியாகும்.

தமிழ் மொழியில் தலைசிறந்த புலமை படைத்திருந்தார் அந்தப் பேரறிஞர் என்பதை நாடு நன்கறியும். ஆனால் வட மொழியிலேயும் ஆங்கிலத்திலேயும் அவருக்கிருந்த புலமை, தமிழ்ப் புலமைக்குச் சிறிதும் குறைந்ததல்ல என்பதை ஒருசிலரே அறிவர்.

'ஆழ்மான தண்ணீர் அமைதியாக ஓடிக்கொண்டிருக்கும்' என்று ஆங்கிலத்தில் ஓர் பழமொழி உண்டு. அடிகளாரின் வாழ்க்கை இந்தப் பழமொழிக்கு ஒரு தலைசிறந்த எடுத்துக்காட்டு. ஆழ்ந்த புலமையும் தேர்ந்த அறிவும் தெளிந்த உள்ளமும் படைத்த அந்த

அறிவுச்சுடர், வெற்றாரவாரத்திலோ, பொருளற்ற போலிக் கூச்சல்களிலோ தன்னுடைய நேரத்தை வீணாக்கியது கிடையாது. எப்போதும் அமைதியாக இருந்து, ஓய்வாகப் படித்து, நிதானமாகச் சிந்தித்து, அருமையான ஏடுகளை, அற்புதமான முறையில் எழுதி வெளியிடுவதே அவருடைய பாதையாக இருந்து வந்தது. ஆனால் இப்படியெல்லாம் அமைதியின் சின்னமாக இருந்த அறிவு ஒளியைக் கூட, 1938-ல் தமிழ்நாட்டில் மூண்டெழுந்த இந்தி எதிர்ப்பு இயக்கம், மடமடவென்று இழுத்துவந்து மக்கள் முன்னணியில் நிறுத்தியது. "இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமாம்! நீங்கள் எல்லோரும் வாருங்கள் நாட்டினரே! செந்தமிழுக்குத் தீமை வந்த பின்னும் இந்தத் தேகம் இருந்தொரு லாபமுண்டோ?" என்கிற அன்பழைப்பு, தமிழ்நாட்டுத் தலைவர்களிடமிருந்து பிறந்தோடிவந்த போது, அந்த அழைப்பை, அரசியல் ஆரவாரங்களை ஒருநாளும் விரும்பாத அடிகளால்கூட தட்டிக் கழிக்க முடியவில்லை. தமிழன் மீது அவருக்கிருந்த தணியாத காதல், தமிழுக்கு வந்த ஆபத்தைத் தூள் தூளாக்க அவரை விரட்டியடித்தது போர்க்களத்திற்கு. 1938, 1939, 1940-ம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் சண்டமாருதமெனச் சுழன்று சுழன்று வீசிய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அவரும் சிறந்த பங்குகொண்டார். பற்பல பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு, கட்டாய இந்தியால் தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் வரக்கூடிய ஆபத்துகளை அச்சம் தயை தாட்சண்யமின்றி விளக்கிக் காட்டினார் அடிகளார். அதுமட்டுமா, அவருடைய ஆர்வத்தைக்கண்டு, அதுபோன்ற ஆர்வம் கொண்டு, அவருடைய குடும்பம் முழுவதுமே இந்தி எதிர்ப்புப் போரில் முழு மனதுடன் ஈடுபட்டது. அவருடைய மூன்றாவது மகனார் புலவர் மறை திருநாவுக்கரசு இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டு நான்கு திங்கள் சிறைவாசமும் ஏற்றார். அவர் ஆசிரியப் பணி புரிந்துவந்த பள்ளியினர் இந்தி கூடாது என நீர் முழங்கக்கூடாது என்று சொன்னபோது, அத்தகைய பதவியும் எனக்குக்கூடாது என்று அதை வீசி எறிந்துவிட்டு சிறைக்கோட்டம் புகுந்தார். அடிகளாரின் இரண்டாவது மகனார் மறை மாணிக்கவாசகம், புன்முறுவல் பூத்த முகத்துடன் எங்கும் நடமாடி, பல அரிய கூட்டங்கள் அமைத்துத் தமிழர் வாழ்வு தழைத்திடத் தொண்டு செய்தார். அடிகளாரின் ஒரே மகள் நீலாம்பிகை அம்மையார், சென்னை ஒற்றைவாடைக் கொட்டகையில் கூடிய தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டிற்குத் தலைமைதாங்கி இந்திப் போரில் தமிழ்ப் பெண்கட்கும் தலையாய பங்குண்டு என்பதை நிலைநிறுத்தினர். மறைமலையடிகளாரின் தலைமருமகள் சரோசனி அம்மையாரும், இளைய மருமகள் ஞானம் அம்மையாரும் கட்டாய இந்தியை

(63-ம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க நாட்டுப் புரட்சிக் கவிஞர்

—[ சிந்தனைச் செல்வன் ]—

ஒரு நூல்! அதற்கு நூற்றுண்டு விழா! ஆச்சரியமான செய்திதான்! ஆனால் சமீபத்தில் வாஷிங்டனில் இவ்விழா வெற்றிகரமாக (19–5–1955-ல்) கொண்டாடப்பட்டிருக்கிறது! அதுமட்டுமல்ல—அதையடுத்து (31–5–55-ல்) அதை எழுதிய ஆசிரியரின் பிறந்த நாள் விழாவும் சிறப்பாக நடந்தேறியிருக்கிறது!

ஆனால் இவ்வளவு பெருமைகளுக்கும் இலக்கான அந் நூலும், அவ்வாசிரியரும் ஆரம்பத்தில் எப்படி மதிக்கப்பட்டார்கள், அன்றைய நிலை எங்ஙனம் இருந்தது என்றெல்லாம் விளக்குவதுதான் இக் கட்டுரை!

"ஏய்!"

உற்சாகமும் மகிழ்ச்சியும் பொங்கி வழியப் பெருமையோடு மேஜையின் மேலிருந்த புத்தகம் புதிய புத்தகத்தையே வைத்த கண் வாங்காது பார்த்துக்கொண்டிருந்த அவன் திடுக்கிட்டுத் திரும்பினான்.

"வேலையைக் கவனிக்காமல் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று உரத்த குரலில் அதட்டியபடி அருகே வந்தார் அவன் மேலதிகாரி.

பரபரப்போடு எழுந்தபடி அவருக்கு வணக்கம் தெரிவித்தான் அவன். மேஜையை நெருங்கிய அவர் கண்களில் அப் புத்தகம் படவே அதைக் கையிலெடுத்தார். அதன் மீது பார்வையைச் செலுத்திய அவர் முகம் கோபத்தால் கருத்தது. விழிகள் சிவந்தன. ஆத்திரத்தோடு அதை வீசி எறிந்தார்.

"இது எப்படி இங்கு வந்தது?" ஆவேசத்தைக் குழைத்துக்கொண்டு வந்தது இந்தக் கேள்வி. அவனுக்கு உடனே உடல், உள்ளம், எல்லாம் பதறின. எனினும் அமைதியோடு பதிலளித்தான்.

"இது என்னுடையதுதான். இதன் ஆசிரியனும் நான்தான்."

"என்ன? இந்தக் கழிசடைப் புத்தகத்தின் ஆசிரியனா நீ? கவிதை மணிகளிடையே கருத்

நற்ற பதரைச் சேர்த்து, இலக்கியத்தையே கெடுக்கத் துணிந்த கயவன் நீ தானு?...உம்! நட வெளியே! இனிமேல் உனக்கு இங்கு வேலையில்லை!' கனல் பறக்கக் கத்தினுர் அவர்.

அவன் பொறுமையே உருக் கொண்டவன் போல வீசியெறியப்பட்ட புத்தகத்தை எடுத்து மார்போடு அணைத்து வெளியே நடந்தான். அவன் முகத்தில் வருத்தமோ,வேதனையோ சிறிதுமில்லை. எப்போதும்போல சாந்தமான புன்சிரிப்புத்தான் தவழ்ந்து கொண்டிருந்தது. அப் புத்தகம் அங்கு இருப்பதே தவறு என்று கருதும் மேலதிகாரி அவன்தான் அதன் ஆசிரியன் என்ற பிறகுமா அவனை அங்கு வைத்துக் கொண்டிருப்பார் என்பது அவனுக்குத் தெரியாததா என்ன?

அங்ஙனம் அத்துணை வெறுப்பிற்குள்ளான அப்புத்தகம்தான் என்ன? அதை எழுதிய அவன் யார்?

'புல்லின் இதழ்கள்'—இதுதான் அப்புத்தகத்தின் பெயர்!

'வால்ட் விட்மன்'—இவன் தான் அதனை இயற்றியவன்! ஆம், புட்சிக் கவிஞன் என்ற புகழ் மொழியிலே புத்தொளி பரப்பும் 'வால்ட்விட்மன்' (Walt Whitman)தான் அப் புதுமைப் பெட்டகத்தை உருவாக்கியவன்! இன்று உன்னதக் கவிஞன் என்று உலகத்தால் போற்றிப் புகழப்படும் அவன்தான் அன்று வெறுப்பின் விருப்புள்ள தோழன்! ஈடு இணையில்லாக் கவிதைச் செல்வங்கள் என்று எண்ணற்றோர் இதயங்களிலே எழுச்சி முரசுகொட்டும் அவன் கவிதைகளைத் தான் மக்கள் அன்று எள்ளி நகையாடினர்! ஏறெடுத்துப் பார்க்க மறுத்தனர்!

எனினும் அப் புதுமைக் கவியின் எண்ணம் புரண்டுவிடவில்லை. உண்மைப் புதுமைக் கவியாகவே திகழ்ந்து திண்மையான கருத்துக்களோடு, வசவுகளை வாழ்த்துக்களாக நினைத்து, எதிர்ப்புகளைத் துச்சமெனத் தூக்கி யெறிந்து துணிவுடன் தன் வழி நடந்தான். இணையில்லாத இலட்சிய வெற்றியையும் அடைந்து எல்லோர் இதயங்களிலும் புகுந்தான்!

'லாங் ஐலண்'டில் உள்ள வெஸ்ட் ஹில்ஸ்' என்ற பகுதியில் விவசாயமும் கைத்தொழிலும் செய்து பிழைத்துவந்த வால்டர் என்ற ஏழைக் குடியானவனுக்கு 1819-ஆம் ஆண்டு மே 31-ஆம் நாளன்று பிறந்தான் இந்த இலட்சியவாதி! எனினும் அங்குப் போதிய வருவாய் கிடைக்காமையால் 1923-ல் வால்டர் தன் குடும்பத்தோடு புரூக்ளின் நகர் சென்று தச்சு வேலைசெய்து வாழத் துவங்கினான். தந்தையின் அன்பிலும் தாயாரின் அணைப்பிலும் துள்ளி மகிழ்ந்தபடியே வளர்ந்தான் விட்மன்.

தக்க வயது வந்ததும் விட்மனை அவன்பெற்றோர் பள்ளிக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் விட்மன் படிப்பில் பற்றுடையவனாகவோ, திறமைசாலியாகவோ இருக்கவில்லை. விளையாடுவதிலும் வீண் பொழுதைக் கழிப்பதிலும் தான் அவன் கவனம் சென்றது. பள்ளி ஆசிரியரும், பெற்றோரும் எவ்வளவோ வற்புறுத்தியும்,பனிரண்டாம் வயதில், அதுவரை அவனோடு ஒட்டிக்கொண்டிருந்த கல்வித் தொடர்பை வெட்டி தூர எறிந்துவிட்டான்.

படிக்கத்தான் முடியவில்லை, தனக்கு உதவியாகவாவது இருக்கட்டும் என்று நினைத்த அவன் தந்தை அவனைத் தன்னுடனேயே வைத்துக்கொண்டார். என்றாலும் அவன் உள்ளத்தில் தந்தையின் எண்ணத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் அடங்குவதாக இல்லை. பணம் படைத்தோரின் பிள்ளையாக இருந்தாலும் பரவாயில்லை, பஞ்சையின் பிள்ளை பொறுப்புணர்ந்து தொழில் கற்றால் தானே பிழைக்கமுடியும் என்று நினைத்த தந்தை நன்கு யோசனை செய்தார். தன்னுடன் இருப்பதைவிடப் பிறரிடம் இருந்தால் மனம் திருந்துவான் என முடிவு செய்து வக்கீல் ஒருவரிடம் அவனை வேலைக்கமர்த்தினார். அங்கும் அவனால் அதிககாலம் நீடித்திருக்க முடியவில்லை. இன்னொரிடம் நானையோர் தொழில் என்று நிலையற்று பயனற்றதாகத் தான் அவன் இளமை வாழ்க்கை ஓடியது.

சில ஆண்டுகள் இப்படிச் சென்ற பின் அவன் ஓர் அச்சகத்தில் அச்சுக் கோர்க்கும் தொழிலாளியாக அமர்ந்தான். ஆனால் மற்ற இடங்களைப்போலல்லாமல் இங்கு அவன் வாழ்க்கை ஒரு திருப்பத்தை அடைந்தது. அவன் இங்கு நிலையான சூழ்நிலையை — அமைதியான முன்னேற்ற வழியை அமைத்துக் கொண்டான்.

மணலிலே வீடுகட்டி அழித்து விளையாடுவதைப்போல, பெட்டிகளிலே இறைந்து கிடக்கும் எழுத்துக்களைச் சேர்ப்பதும், பின் பிரிப்பதும் அவனுக்கு ஒரு விளையாட்டாகத் தோன்றினும் அதில் ஒரு கவர்ச்சி விழுந்தது. உள்ளத்திலே உற்சாகத்தையும் செயலிலே ஆர்வத்தையும் குழைத்துவிட்ட அந்த வேலையையே உறுதியான தொழிலாக்கித் தன் வாழ்நாள் முழுவதும் தொடர விரும்பினான். ஓரளவு தொடரவும் செய்து அதில் கெட்டிக்காரனாகவும் ஆனான்.

அந்த நாட்களிலேதான் இளமையில் குப்பையிலே தூக்கி எறியப்பட்டதன் அறிவு வைரத்தைத் தேடி எடுத்துத் தகுந்த முறையிலே பட்டை தீட்டிப் பளபளப்பாக்கினான். அதாவது, அங்கு அச்சேறவரும் சுவையான விஷயங்களும் புத்தகங்களும் அவனைக் கவரவே, அவற்றின் பக்கம் தன் பார்வையைத் திருப்பினான். காந்தத்தோடு இணைந்த இரும்பைப்போலஅவன் உள்ளமும் அவற்றோடேயே

பிணைந்தது. நல்ல புத்தகங்களைப் படிக்கவேண்டும் அவ்வேலைகளைத் தானே செய்யவேண்டும் என்று நினைத்த அவன் அங்குவரும் புத்தக வேலைகளைத் தானே முந்திக் கொண்டு சென்று ஏற்ருன்.

நல்ல, நல்ல இலக்கியங்கள் வரும்போதெல்லாம் அவன் களிப்பின் உச்சிக்கே சென்று விடுவான். உள்ளத்திலே அப் புத்தகங்களை அப்படியே பதித்த படி, விறு விறுப்போடு வேலைகளைச் செய்து அவைகளைச் சிறந்த முறையிலே அமைப்பான். தன் திறமையினுல் அப் புத்தகங்கள் அருமையாகவும், அழகாகவும் அமைவதைப் பார்த்துப் பூரிப்புமடைவான். அந்த அளவோடு நின்றுவிடாது அம்மாதிரி இலக்கியங்களைத் தானும் எழுத வேண்டும் என்று முடிவுசெய்து முயற்சியும் செய்வான்.

இப்படியே அவன் நெஞ்சம் கொஞ்சம், கொஞ்சமாக இலக்கியத்தின் கவர்ச்சியிலே இழுக்கப்பட்டு அசைய ஆரம்பித்தது. மெதுவாகச் சிறு சிறு கட்டுரைகளும் கதைகளும் எழுதத் தொடங்கினுன். அவன் நண்பர்களும் அச்சக முதலாளியும் அவனுக்கு நல்ல முறையிலே ஊக்கம் தரவே அவனுடைய எழுத்தும் ஆர்வமும் வளர்ந்தன. ஆதலால் ‘பிராங்க்ளின் ஈவான்ஸ்’ என்றொரு நாவலையே எழுதி முடித்தான். அதனை நியூயார்க் பத்திரிகை ஒன்றும் 1841–ல் வெளியிட்டு அவனைப் பெருமைப் படுத்தியது. ஆனுல் அதனைப் பொதுமக்கள் அப்போது மதித்துப் போற்றவில்லை. ஏன், கவனிக்கவேயில்லை! புதிய எழுத்தாளர்களுக்கே வாசகர்கள் பெருமையோடு போர்த்தும் பொன்னுடை (!) அவனுக்கு மட்டும் விதிவிலக்காகி விடுமா என்ன?

என்ருலும் விட்மன் தளர்ந்து விடவில்லை. தன்னுல் நன்ருக எழுதமுடியும்—தன் எழுத்துக்கள் இன்றில்லாவிட்டால்என்ருவதொருநாள் மக்களிடையே மதிப்புப் பெறும் என்ற நம்பிக்கையோடு தொடர்ந்து எழுதினுன். அதன் பலன் 1846–ல் புரூக்ளின் டெய்லி ஹெராரால்டு என்ற பத்திரிகையின் ஆசிரியனுனுன்.

ஆனுல் பத்திரிகையில் தலையங்கம் எழுதுவது மட்டுமல்ல அவன் வேலை–பத்திரிகைகளுக்கு வரும் புத்தகங்களுக்கு விமரிசனம் தருவது நாடக அரங்குகள், பொதுக் கூட்டங்கள், மற்றும் விசேஷ நிகழ்ச்சிகளுக்குச்சென்றுசெய்திகள் சேகரிப்பது முதலான இன்னும் பல வேலைகளையும் அவன் செய்யவேண்டியிருந்தது. இவ் வேலைகள் எல்லாம் அவனுக்குத் தொல்லையாக இராமல் மகிழ்ச்சியாகவே இருந்தன. அதனுல் அவன்உற்சாகத்தோடுஅவைகளை யெல்லாம நல்ல முறையிலே செய்து முடித்து, பொறுப்பாளர்களிடம் நல்லபெயரும் பெற்ருன்.

இந்த சமயத்தில் பெரும் பரபரப்பைக் கிளப்பிவிட்ட ‘அடி

மைச் சந்தை' பிரச்னை எங்கும் எழுந்தது. 'சுதந்திர மனிதன்' என்ற அடைமொழியிலே சுழலும் விட்மன் இதைப்பற்றி எழுதாமல் விடுவானா? மனிதனை மனிதன் அடிமைப்படுத்துவது மடமை; அடிமைப்படுத்தி அடக்கியாள்வது பெரும் கொடுமை. அதனைத் தடுத்து அவர்களை விடுவிப்பது நம் கடமை—என்று 'அடிமைத் தளை'யைப் பற்றி வெகுவாகக்கண்டித்து பத்திரிகையிலே காரசாரமாக எழுதினான். ஆனால் பத்திரிகை முதலாளிக்கு இது பிடிக்கவில்லை. நேரிய வழியே தன் வழி என்று நினைத்த அவன் அவ்வாசிரியர்வேலையையே உதறி எறிந்துவிட்டு 1848-ல் நியூ ஆர்லியன்ஸிற்குச் சென்றான்.

அங்கு சிலரின் கூட்டுறவோடு, 'தி கிரெசென்ட்' என்றொரு பத்திரிகையை ஆரம்பித்தான். அதில் தன் கொள்கைகளையும் கருத்துக்களையும் எழுதினான். அங்கு உடலை வருத்தி உண்மையாக உழைத்துழைத்து உருக்குலையும் உழைப்பாளர்களின் நிலையையும், அவர்களை ஆதரித்தும் கட்டுரைகள் தீட்டினான். எனினும் எவ்வளவோ கஷ்டப்பட்டும் மூன்று மாதங்களுக்குமேல் அவனால் அப்பத்திரிகையை நடத்த முடியவில்லை.

இந்நேரத்தில் அவன் வாழ்வில் மீண்டும் ஒரு திருப்பம் ஏற்பட்டது. ஒன்றும் உதவாதவனாகவும், உழைப்பாளியாகவும் இருந்த அவன் இப்போது காதலனாகவும் மாறினான். ஆம், அவனுக்கும் அழகியொருத்திக்கும் தொடர்பு ஏற்பட்டது. அத்தொடர்பு நாளடைவிலே காதலாக மாற இருவரும் ஈருடலும் ஓருயிருமாயினர். அன்பும், ஆனந்தமும் பெருக்கெடுத்தோட அவர்களிருவரும் இல்லறமமைத்தனர்.

அவ்வாழ்வு விழா, மற்றவர்களின் திருமண விழா போன்று நடக்கவில்லை - இருமனமும் ஒருமனப்பட்ட நாங்கள் திருமணம் செய்து கொள்கிறோம் என்று அழைப்பிதழ் அச்சிட்டு யாருக்கும் வழங்கவில்லை; அலங்காரப் பந்தலும், ஆடம்பரமும் செய்து ஆயிரக் கணக்கிலே பணத்தைச் செலவிடவில்லை; ஆண்டவனின் பிரதிநிதியாக அவர்கள் மணத்தை அங்கீகரித்து ஆசீர்வதிக்க புரோகிதரைக் கூட அவர்கள் அழைக்கவில்லை — இருவரும் சேர்ந்தார்கள். இணைந்து வாழலாம் என்று முடிவு செய்தார்கள். உடனே வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டு குடும்பமமைத்தார்கள். அவ்வளவுதான். அத்துணைப்புரட்சிமனப்பான்மை அவனோடு இணைந்திருந்தது.

இன்பத்தைத் தெளித்தபடியே ஆண்டுகள் பல உருண்டன. அதுவரை அவனோடு இணைந்து இல்லறத்திலே மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டிருந்த அவன் காதலி திடீரென்று ஒருநாள் அவனை விட்டு விலகிவிட்டாள். அவள் யார், ஏன் விலகினாள் என்றெல்லாம் யாருக்குமே தெரியாது. தாங்கள் இருவரும் ஒன்றுபட்

டிருந்தபோது வாழ்க்கை சந்தோஷமாகக் கழிந்தது. குழந்தைகள் பிறந்தன. ஒரு பேரன்கூட உண்டு. இவ்வளவுமட்டும் பகிரங்கமாகத் தெரிந்தால் போதும் என்று பிற்காலத்தில் கூறிய விட்மன் அதற்குமேல் வேறு எதையும் வெளியிட மறுத்துவிட்டாணும். அவள் மேல் இருந்த உண்மை அன்பால், அவன் வேறு யாரையும் மணம் செய்துகொள்ளாது தனியாளாகவே கழிக்கவும் செய்தான்.

'நியூ ஆர்லியன்ஸ்' வாழ்வு விட்மனுக்கு வெறுப்பைத் தரவே புரூக்லினுக்கே திரும்பி விட்டான். அங்கிருந்தவாறே பத்திரிகைகளுக்குக் கதை—கட்டுரை—கவிதைகள் எழுதியனுப்பியதோடல்லாமல் தந்தையின் தச்சு வேலைக்கும் உதவிபுரிந்து வாலாஞன்.

மனே உழைப்போடு நில்லாமல் உடலுழைப்பிலும் ஈடுபட்ட விட்மனின் கவனம் இந்த நேரத்தில் ஏழை உலகின் பக்கம் திரும்பியது. ஓய்வு நேரங்களிலும் வாய்ப்பேற்படும் வேளைகளிலும், உழைப்பாளிகள் வாழும் பகுதிகளுக்குச் சென்று அவர்களோடு உளம்விட்டுப் பழகிஞன். பஞ்சமும் வறுமையும் சூழ்ந்து நிற்கக் குறையின் உருவங்களாகவே அவர்கள் உலவிக் கண்ணீர் வடிப்பதை அறிந்தான். அதற்குக் காரணம் அவர்களிடை மண்டிக் கிடக்கும் பழமைச் சேறுதான் என்பதையும் உணர்ந்தான்.

வேலைக்குச் செல்வதற்கும் தங்கள் வயிற்றைக் கழுவுவதற்குமே நேரமற்ற அந்த ஏழைகள், போதிய வசதியில்லாததால் தங்கள் செல்வங்களையும் அறியாமையின் வாரிசுகளாக்கிப் படிப்பறிவில்லாமல் பாழாக்கும் கொடுமையைத் தடுக்கவேண்டும் என்று முடிவு செய்தான். அந்த அளவோடு நின்றுவிடாமல் அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டான் — லாங் ஐலண்டிற்குச் சென்று நான்கைந்து ஆண்டுகள் ஆசிரியஞகப் பணியாற்றி ஏழை மாணவர்களுக்குப் படிப்புச் சொல்லித்தந்தான்.

அந்த நாட்களிலே அவன் தன் அறிவை மேலும் வளர்த்துக் கொண்டான். பெரும் பெரும் ஆசிரியர்களின் உலகப் பிரசித்தமான இலக்கியங்களையெல்லாம் படித்தான். அதைப்போலவே நிறைய எழுதவும் செய்தான். இப்படி அமைதியாக ஓடிக் கொண்டிருந்த அவன் வாழ்க்கையில் திடீரென்று ஒரு புயல் எழுந்தது. அவன் தந்தை மறைந்தார். அதனுல் அவன் பெரும் அதிர்ச்சிக்குள்ளாஞலும், ஓரளவு தேற்றிக்கொண்டு மீண்டும் தன் வாழ்வை அமைதியாகவே ஓட்டிஞன்.

அவ்வமைதியினூடேயே 'தி லாங் ஐலண்டர்' என்ருெரு பத்திரிகையைத் துவக்கிஞன். அப்பத்திரிகை அதிக அளவு விற்பனையாகவில்லையாஞலும் வெகு சிரமப்பட்டு இரண்டாண்டுகள் வரை தொடர்ந்து நடத்திஞன். அதற்

கு மேல் சமாளிக்க முடியாமற் போகவே பத்திரிகை நிலையத்தையே விற்றுவிட்டான். பிறகு, 'ஜமைக்கா'வில் நடந்துவந்த 'லாங் ஐலண்ட் டெமாக்ரெட்' என்ற பத்திரிகையின் ஆசிரியப் பதவி விட்மனுக்குக் கிடைத்தது.

என்றாலும் அவனால் அதையும் நீண்டு தொடர முடியவில்லை. மான்ஹாட்டன் என்ற ஊருக்குச் சென்று அச்சுக் கோர்க்கும் வேலையிலேயே மீண்டும் அமர்ந்தான். அங்கிருந்தவாறே பல பத்திரிகைகளுக்குத் தன் எழுத்தோவியங்களை அனுப்பிவந்தான்.

பிறகு அதையும் நீடிக்காமல் புரூக்லினுக்கே திரும்பினான். முன்னைப்போல பயனற்ற வேலைகளும், நாடோடி வாழ்வும் நடத்தாமல் மிகச் சிறந்ததோர் பணியிலே ஈடுபட்டான். 'ரோமன் சகோதரர்கள் அச்சக'த்தில் சிறு தொகை கொடுத்துத்தானே தன் புத்தகத்தை அச்சுக்கோர்க்கும் வேலையில் ஈடுபட்டான். முதல் புத்தகத்தையும் வெற்றிகரமாக உருவாக்கி 1855-ம் ஆண்டு மே திங்கள் 19-ம் நாளன்று பெருமையோடு வெளியிட்டான்.

அப்புத்தகத்தில் தலைப்பில்லாமல் 12 கவிதைகள் இருந்தன. முதற் பக்கத்தில் உழைப்பாளிகள் உடுக்கும் சாதாரண உடையும், விலை மலிவான அகன்ற தொப்பியும் சிறிய தாடியு முடைய அவன் படம் ஒன்று இருந்தது. ஒரு கவிஞனுக்குரிய தோற்றமோ அல்லது கற்றுப் புத்தகம் வெளியிடும் ஆற்றல் பெற்றவன் அணியும் உயர்ந்த ஆடை, அணிகலன்களோ அதில் காணவில்லை. மேலும் அதை எழுதிய அவன் பெயரும் அதில் பொறிக்கப்படவில்லை. ஆனால் அப்படத்தை யடுத்து ஒரு நீண்ட முகவுரை இருந்தது. அதில் கவிதை என்றால் என்ன, அதன் தத்துவம் யாது, கவிதையின் இலக்கணம்-அமைப்பு எப்படி இருக்கவேண்டும் என்றெல்லாம் விளக்கப்பட்டிருந்தது. இவ்வளவுதான் அப்புத்தகம்! அதன் விலை இரண்டு டாலர்!

அப்புத்தகத்தின் பெயர் 'புல்லின் இதழ்கள்'! ஆம் பிற்காலத்தில் இமயத்தின் உயரத்தையும் பசிபிக்கின் ஆழத்தையும் தன்னுள்ளே கொண்டு தனிப்பெயர்பெற்ற 'புல்லின் இதழ்கள்' என்ற புத்தகத்தின் முதற்பதிப்புத்தான் அது!

ஆனால் அப்புத்தகத்தை வாங்க யாரும் முன்வரவில்லை. "புல்லின் இதழ்களா? புல்லன் எவனாவது எழுதியிருப்பான்" என்று அதைப் படிக்காமலே கேலிதான் பேசினர். வாங்கிய இரண்டொருவரும் வசை மொழிகளைத்தான் பாராட்டுரைகளாக வீசினர். காரணம் அக்கால முறையை ஒட்டி அப்புத்தகம் அமையவில்லை. பொன்னுடைக்குள் புகுந்திருப்போரின் எழுத்துக்களும், மின்னும் அட்டைகளுடைய ஏடுகளும்தான் அன்று புத்தகங்களாக மதிக்கப்பட்டன.

தவிரவும் வழக்கமான இலக்கண வரம்பை யொட்டி அவன் கவிதைகள் இயற்றவில்லை. 'கவிஞன் சீர்' தளைகட்கும் எதுகை மோனைக்கும் கட்டுப்பட்டவனல்லன். சொல்லிற்கும் யாப்பிற்கும் இலக்கணத்திற்கும் கூட அவன் அடிமையல்லன். அவன் அவற்றின் தலைவன். கருத்தின் முதல்வன்—என்ற கருத்தின் உருவமான விட்மன், தன் கவிதைகளை தன் எண்ணப்படியே எழுதியிருந்தான். அவை அக்கால மக்களுக்கு—அங்கு புதிதாகக் குடும் பமமைத்துக்கொண்டிருந்த சமுதாயத்திற்கு அடியோடு புரியவில்லை. அவன் கவிதைகளைத் தவறு என்று கூடக் கருதினர்.

மேலும் அவன் கவிதைகளிலே பழக்கமான பண்டைப் பெருமையும் பகவானின் அருமையும், தலைவர்களின் திறமையும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கவில்லை. இயற்கையின் அழகையும் ஏழைகளின் துயரையும், மனித நம்பிக்கையையும், ஜனநாயகத்தின் மாண்பையும் விளக்கும் கருத்துக்கள்தான் அரசோச்சின.

அப்புதிய அமைப்பு முறையும் கருத்துக்களும் அவர்களுக்கு விளங்காமற் போகவே, அவை எளிதில் மக்கள் இதயங்களிலே இடம்பெற முடியவில்லை. பழமையைப் பிளந்துகொண்டு எழும் புதுமைக்கு எப்பொழுதுமே எதிர்ப்பு அதிகமாகத்தான் இருக்கும் என்பதை நன்குணர்ந்த விட்மன் கவலையேதும் கொள்ளாது அந் நூட்களின் சில பிரதிகளை பல அமெரிக்க நூலாசிரியர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் அனுப்பிவைத்தான். ஆனால் நேர்மையான விமரிசனத்தையும் பாராட்டையும் எதிர்நோக்கிய அவனுக்கு அங்கும் கண்டனப் புயல் தான் பரிசாகக் கிடைத்தது.

பழமைக் குட்டையிலே ஊறிய அவ்வமெரிக்க நூலாசிரியர்கள் அப்புத்தகத்தைப் பற்றிக் கண்டபடி இழிவான முறையிலே எழுதி அவனுக்கே திருப்பி அனுப்பி விட்டனர். பத்திரிகைகளும் அவர்கள் எண்ணத்தையே பிரதிபலித்துப் பலமாகக் கண்டித்து எழுதின — ஏறத்தாழ இரண்டாண்டுகள் வரை இந்நிலை நீடித்தது.

எனினும் விட்மன் மனம் குன்றவில்லை. அதற்குக் காரணம் அக்கால அறிஞர்களில் மிகவும் சிறந்து விளங்கிய (ரால்ப் வால்ட்) 'எமர்சன்' தான்! விட்மன் அவருக்கும் மதிப்புரைக்காகப் புத்தகத்தை அனுப்பியிருந்தான். அதைப்படித்து ரசித்து மகிழ்ந்த அவர் அவன் கவிதைகள் உண்மையில் மிக உயர்ந்தனவென்றும், எதிர்காலத்தில் அவன் தலைசிறந்த கவிஞனாகப் போகிறான் என்றும் உளம் திறந்து அவனைப் பாராட்டி எழுதியிருந்தார். விட்மனுக்கு அவர் ஒருவர் கருத்தே உலகத்தின் மதிப்புரையாகத் தோன்றியது. அவன் மகிழ்ச்சியை மேலும் அதிகரிக்கும் முறையிலே 'நார்த் அமெரிக்கன் ரெவ்யூ' என்ற பத்திரிகை அவன் கவிதைகளை நல்ல முறை

யில் விமர்சித்துப் பாராட்டி எழுதியது.

அளவில்லாத பூரிப்படைந்த விட்மன், எமர்சனின் பாராட்டுரைகளோடு புல்லின் இதழ்களை மற்றொரு பதிப்பு வெளியிட்டான். அறிஞனின் ஆசிபெற்றும் அப்புத்தகம் ஓராண்டில் ஐம்பதே பிரதிகள் தான் விற்பனையாயினவாம். சிறு துளி பெரு வெள்ளமாவதைப்போல, மெதுவாக அவன் கவிதைகள் மக்கள் மத்தியிலே இடம்பெற ஆரம்பித்தன. 1860-ல் 'புல்லின் இதழ்கள்' 154 பாடல்களுடன் மூன்றும் பதிப்பாக வெளியாகியது. செல்வாக்கு மலையின் படிகளிலே ஏற, ஏற அவன் கவிதைகள் எங்கும் பரவி, மேலும் பல கவிதைகளோடு புல்லின் இதழ்கள் மேலும் பல பதிப்புகளுக்கு உள்ளாயிற்று. அது மட்டுமல்ல, வேற்று நாட்டவரையும் அவன் கவிதைகள் கவர—அவை பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்க்கப் படத் துவங்கின.

இதே நேரத்தில் அமெரிக்காவில் ஒரு பெரும் உள்நாட்டுப் போர் கிளம்பியது. அடிமைகளுக்குச் சுதந்திரமளித்த மேற்கு வர்ஜீனியாவிற்கும், அடிமைகளை அடிமைகளாகவே வைத்திருந்த கிழக்கு வர்ஜீனியாவிற்கும் தான் 1861-ஏப்ரலில் சண்டை எழுந்தது. போர் அடிமை விவகாரத்தைப் பற்றியதாக விருந்தாலும், அது அப்பொழுது தான் குடியரசுத் தலைவராகத், தெரிந்தெடுக்கப்பட்டிருந்த 'ஆப்ரகாம் லிங்கனை' எதிர்த்தே ஏற்பட்டதாகக் கருதப்பட்டது. இந்த நெருக்கடியான நிலையையும் லிங்கன், தன் துணைத்தளபதி ஜெனரல் கிராண்டைக் கொண்டு வெகு திறமையாகச் சமாளித்தான்.

அப்போருக்கு விட்மனின் சகோதரன் ஜார்ஜும் படையில் சேர்ந்து சென்றிருந்தான். ஆனால் 1862-ல் 'பிரெடரிக் பர்க்' என்னுமிடத்தில் காயமடைந்தான். எனவே சகோதரரின் உதவிக்காக விட்மன் போரில் அங்கு சென்றான்.

அங்கிருந்த நிலையைக் கண்டு உளம் வெதும்பினான். கால் இழந்தவர்களும், கை போனவர்களும், கண் குருடானவர்களும் உயிருக்கு ஊசலாடுபவர்களும் நிறைந்த அவ்விடத்தைக் கண்டு அவன் மனம் கொதித்தது. படுகாயத்திற்குள்ளாகிப் பரிதவிப்பவர்களை யெல்லாம் பார்த்த அவனும் அவர்களோடேயே ஐக்கியமாகி அவர்களுக்கு ஓயாது உதவிபுரிந்தான். மனிதாபிமானத்தைக் காக்கப் போரிட்ட அவர்களுக்கு உதவிபுரிவது, தான் செய்யும் சேவை என்று கருதித் தளராது பணிபுரிந்தான். அத்துடனின்றிச் சில பல நேரங்களிலே தனது சொந்த பணத்தையும் அவர்களுக்காகச் செலவிடவும் செய்தான்.

இங்ஙனம் ஓயாது, ஒழியாது உழைத்த அவன் உடல் தளர நோயாளியானான். போர்க்களத்தி

லேயே அவன் நாட்களைக் கழித்த தாலும் போதிய வருவாயின்றி கையிலிருந்த கொஞ்சம் பணத்தையும் அங்கு செலவிட்டதாலும் அவனை நோயோடு வறுமையும் வளைத்துக்கொண்டு வேதனைப் படுத்தியது.

எனவே நண்பர்களின் உதவியால் 'இந்தியன் பீரோ' என்னும் அலுவலகத்தில் வேலைக்கமர்ந்தான். ஆனால் அங்கேயும் 'புல்லின் இதழ்களின்' ஆசிரியன் என்றறிந்ததால் வெளியேற்றப்பட்டான். எனினும் லிங்கனின் உதவியால் 'அட்டோர்னி ஜெனரல்' அலுவலகத்தில் ஒரு வேலை கிடைத்தது. அங்கு விட்மனுக்கு வேண்டிய அளவு ஓய்வு கிடைத்தது. அதனால் மேலும் நிறைக் கவிதைகள் எழுதி வெளியிட்டான். 'புல்லின் இதழ்கள்' மறுபதிப்பு ஒன்றும் வெளியிட்டான். 1871-ல் 'ஜனநாயகக் காட்சிகள்' (Democratic Vistas) என்ற அருமையான நூலையும் உருவாக்கிப் பதிப்பித்தான்.

ஆனால் அவ்வமைதியையும் ஆர்வத்தையும் பிடுங்கிக்கொண்டு 'பக்கவாத'த்தை (Paralysis) கொடுத்து மகிழ்ந்தது 1873-ம் ஆண்டு.

வாலிபத்தை இழந்து முதுமையை முற்றுகையிட்டுக்கொண்டிருந்த அவனுக்கு இது பெரும் வேதனையைக் கொடுத்தது. எனவே ஒன்றரை ஆண்டு ஓய்வு எடுத்துக்கொண்டு 'காட்மனில் இருந்த தன் தாயிடம் சென்றான்.

அங்கும் அவனுக்கு இடிமேல் இடிதான் விழுந்தது. அவன் வந்த சில நாட்களில் அவன் அன்னை மறைந்தாள். அந்த சோகத்தை அவன் மறக்கும் முன்பே அவன் செய்துவந்த அரசினர் வேலையும் போயிற்று. ஆகவே இதுவரை சற்று ஒதுங்கியிருந்த வறுமை இப்போது ஓடி வந்து தழுவிக்கொண்டு உறுத்த ஆரம்பித்தது.

ஆனால் இச்சமயத்தில் இங்கிலாந்தில் புல்லின் இதழ்களுக்குப் பெருமை ஏற்படத் துவங்கியது. இங்கிலாந்துப் பத்திரிகைகள் மட்டுமின்றி, அறிஞர்களும் போற்றிப் புகழ்ந்தனர். அன்னியர்களிடையே மதிப்புப்பெற்ற தம் கவிஞனை இப்போதுதான் அமெரிக்கர் உணரலாயினர். நோயாலும் வறுமையாலும் வருந்தும் விட்மனுக்கு கொஞ்சம் பணமும் ஒரு குதிரை வண்டியும் கொடுத்துப் பெருமைபடுத்தினர்.

இந்த நேரத்தில் 'ஆண் ஜில்க்ரிஸ்ட்' என்ற இங்கிலாந்துச் சீமாட்டியை விட்மனின் கவிதைகள் கவர்ந்தன. அதனால் அவள் விட்மனைப் பாராட்டி ஒரு கடிதம் எழுதினாள். அக்கடிதத்தை ரசித்த விட்மன் அவளுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதினான். இப்படியே அவர்களிடையில் ஆசிரிய—வாசக நட்பு விரிந்தது.

1876-ல் விட்மன் நோயால் வருந்துவதாகச் செய்தியறிந்த ஜில்க்ரிஸ்ட்' அமெரிக்காவுக்கு,

வந்தாள். ஏற்கனவே மணமாகிக் குழந்தை குட்டிகளுடைய அவள் 'பிலடெல்பியா' வில் ஒரு வீடமர்த்திக்கொண்டு விட்மனை வந்து கண்டு அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தாள். விட்மனின் நிலை கண்ட அவள் அவனுக்காக மிகவும் இரங்கினாள். தனக்கு மணமாகாமல் இருந்தால் விட்மனையே மணந்துகொண்டு அவனுக்குச் சேவை செய்வதையே தன் வாழ்க்கையின் இலட்சியமாகக்கொண்டு மகிழ்ந்து வாழ்வேன்' என்று அவள் கூறினாள் என்றால் எத்துணை அன்பு அவன் மீது அவளுக்கு இருக்க வேண்டும்? எனினும் பலநாள் அவனருகிலேயே இருந்தபடி அவனுக்குப் பணிவிடை செய்தாள். அதனால் அவன் உடம்பும் ஓரளவு தேறிக் குணமானது. பிறகு தான் அவள் இங்கிலாந்திற்குச் சென்றாள்.

1873–ல் பற்றிய நோய் விட்மனை முழுதும் விடவில்லை எனினும் ஓரளவு குணமானதினால் தன்னருமைத் தம்பியோடு காட்மனிலேயே அமைதியாக நாட்களை விரட்டினான். இயற்கையின் அணைப்பிலே ஏறத்தாழ இருபதாண்டுகள் அதன் பிறகுவாழ்ந்த அவன் தன் இறுதி நாட்களை மரணத்தைப்பற்றியே கவிபாடுவதில் கழித்தான். என்றாலும் அவன் வேறு கவிதைகளும் நூல்களும் இயற்றாமல் விடவில்லை, 'இந்திய வழி' (Passage to India) 'இரண்டு ஓடைகள்' (Two Rivulets) என்ற அருமையான கவிதைகளையும் சேர்த்துப் 'புல்லின் இதழ்கள்' புதிய பதிப்பு ஒன்றையும் வெளியிட்டான்.

அதனால் 300 பவுனும் கிடைத்தது. தள்ளாமையினால் தளர்வடைந்து வந்த அவனுக்கு இது ஒரு பொக்கிஷமாகதான் தோன்றியதாம். நோயின்தொல்லையிலும் உறுதி தளராது உற்சாகத்தோடு வாழ்க்கையை அமைதியாகக் கழித்துக்கொண்டுவந்த அவன் 73–வது வயதில் 27–3–1892–ல் இயற்கையின் வழியிலே தன்னையும் ஒப்படைத்துவிட்டு மறைந்தான்.

பரம்பரை பரம்பரையாகப் பழமைப் பாணியிலே சென்றுவந்த இலக்கியத்திற்கு ஒரு புதிய பாதை வகுத்துத் தந்த அந்நாவலன் மறைந்துவிட்டான். ஆனால் அப்புரட்சிக் கவிஞனின் புகழ் மட்டுமல்ல, அவன் ஆக்கித்தந்த அழியாத இலக்கியங்கள்—அருமையான அறிவுரைகள்—மறையாத எண்ணங்கள் இன்றுமட்டு மல்ல என்றுமே ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்.

நீ செய்யவேண்டியது இது தான்–உலகம், சூரியன், விலங்குகள், இவற்றை நேசி. பணத்தை வெறுத்திடு: கேட்போருக்கு உதவு, மடையர்களுக்கும், பித்தர்களுக்கும் துணை நில்; 'உன் உழைப்பையும் வருவாயையும் மற்றவர்களுக்குக்கொடு: கொடுங்கோலர்களை வெறு; ஆண்டவ

(அடுத்த பக்கம் பார்க்க)

# இந்திய மாகாணங்களின் எதிர்கால அமைப்பு

## சீரமைப்புக் குழுவின் சிபார்சுகள்

இந்தியத் துணைக்கண்டத்தின் மாநில எல்லைக் கோடுகளைத் திருத்தி அமைப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த மாநில புனரமைப்புக் குழுவினர் செய்துள்ள சிபாரிசுகள் அடங்கிய அறிக்கை 10-10-55ல் அதிகார பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியத் துணைக் கண்டத்தை விட்டு வெள்ளை ஏகாதிபத்திய வாதிகள் வெளியேறியதும், பரவலாக 600-க்கும் மேற்பட்டிருந்த 'இந்திய சுதேச சமஸ்தானங்கள்' என்றழைக்கப்பட்ட-சிறிய பெரிய துண்டுகளாகக் கிடந்த நிலப்பரப்புக்கள் எல்லாம், ஏற்கனவே இருந்த மாநிலங்களுடன் இணைக்கப்பட்டு 27 மாநிலங்களாக இதுகாறும் இயங்கிவருகின்றன.

குழுவினரின் சிபாரிசுகளின் படி, இந்த 27 மாநிலங்களும் கூட்டலும் — குறைத்தலுக்கும் உட்பட்டு, 16 மாநிலங்களாக அமைவதுடன், மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகத்தின்கீழ் அமையும் மூன்று மாநிலங்களும் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

குழு சிபாரிசு செய்துள்ளபடி, சென்னை, கேரளம், கர்நாடகம், ஐதராபாத், ஆந்திரம், பம்பாய், விதர்ப்பா, மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், பஞ்சாப், உத்தரப் பிரதேசம், பீகார், மேற்கு வங்கம், அசாம், ஒரிசா, ஜம்மு-காஷ்மீர் ஆகிய 16 மாநிலங்களும், டில்லி, மணிப்பூர், அந்தமான் ஆகிய மூன்று மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாக பூமிகளும் அமைகின்றன.

இப்படி அமைகிற இந்த மாநிலங்களிடையே அரசியல் சட்ட ரீதியான வேறுபாடுகள் எதுவும் இருக்கமாட்டா; இப்போது இருக்கிற 'ஏ', 'பி', 'சி' பிரிவுகள் என்ற மாநில அமைப்பு வேறுபாடுகள் ஒழியும்.

---

(முன் பக்கத்தொடர்ச்சி)

னைப்பற்றி வாதிடாதே. மக்களிடம் அன்பாகவும், ஆதரவாகவும் நட; தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் தனி ஒருவனுக்கு, கூட்டத்திற்கு-எவருக்குமே தலை வணங்காதே; செல்வாக்குள்ள கல்வியறிவில்லாதவர்கள், இளைஞர்கள், குடும்பத் தாய்மார்கள் முதலியவர்களோடு தாராளமாகச் செல்!',

(ஜனநாயகக் காட்சிகள்.)

— திராவிடன்.

குழுவினர் மாநில புனரமைப்பு பற்றி தாங்கள் செய்துள்ள சிபாரிசுகளைப்பற்றிக் குறிப்பிடுகையில், இந்தியாவின் 'தேசீய ஒற்றுமையை மனதில் கொண்டே' கருத்துக்களைப் பரிசீலித்ததாகத் தெரிவித்திருக்கின்றனர்.

இப்போதுள்ள மாநில அமைப்புகளான பெப்சு, இமாசலப் பிரதேசம், மத்திய பாரத், விந்தியப் பிரதேசம், போபால், ஆஜ்மீர், திரிபுரா ஆகியவை, சிபாரிசுகளின்படி அமைகிற 16 மாநிலங்களுக்குள் இணைக்கப்பட்டுவிடுவதால், தனியாக இயங்கும் நிலை அற்றுவிடுகின்றன.

சையத் பாசல் அலியைத் தலைவராகவும், சர்தார் கே. எம். பணிக்கர், எச். என். குன்ஸ்ரு ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட இந்த மூவரடங்கிய மாநில புனரமைப்புக் குழு, கடந்த 1953 டிசம்பர் 23-ந்தேதியன்று இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்டதாகும்.

குழுவினர் செய்துள்ள சிபாரிசுகள் தென்னாட்டிலும்—வடநாட்டிலுமாகப் பெரும் பரபரப்பை உண்டுபண்ணியிருக்கின்றன.

குழு அமைவதற்கு முன்பும், குழு அமைந்தபின்பும், இந்தியத் துணைக் கண்டத்தின் பல பாகங்களிலும், மொழிவழி மாநில அமைப்பு வேண்டுமெனக் கோரி ஆர்ப்பாட்டங்களும், கிளர்ச்சிகளும், போராட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன.

பஞ்சாப் மொழி வழி மாநிலம் அமையாவிட்டால், வரிகொடா இயக்கம் போன்ற பெரும் போராட்டங்கள் நடத்தப்படும் என்று அறைகூவல் தந்திருந்த அகாலி தளத் தலைவர் மாஸ்டர் தாராசிங், குழுவினரின் சிபாரிசுகளைக் கண்டு அதிர்ச்சியுற்றிருப்பதாகத் தெரிகிறது.

1947-ல் ஏற்பட்ட விபரீதத்தைவிடப் பெரிய விபரீதம் ஏற்பட்டுள்ளது என்றும், மாநிலக் குழு அறிக்கை சீக்கிய உலகத்தின் முகத்தையே அழித்துவிடுகிறது என்றும், சீக்கியர் எல்லோரும் ஒன்று திரண்டு இதனை எதிர்க்கவேண்டுமென்றும் அறிவித்திருக்கிறார் தாராசிங்!

சம்யுக்த மராட்டியம் அமையாவிடில், பெரும் கொந்தளிப்பும், குழப்பமும் ஏற்படும் என சங்கரராவ் தேவ் எச்சரித்திருக்கிறார்.

பெல்லாரி மீண்டும் ஆந்திரருக்குத் தரப்பட்டிருப்பது கன்னடியருக்குக் கோபமூட்டியிருப்பதாகத் தெரிகிறது.

திரு-கொச்சியில் உள்ள 9 தமிழ் வட்டங்களில், 5 வட்டங்கள் மட்டுமே தாய்த் தமிழகத்துடன் இணையவும், எஞ்சியவை, புதிய கேரளத்தில் இருக்கவேண்டும் எனவும் குழு சிபாரிசு செய்திருப்பதும் அந்தப் பகுதி மக்களின் அதிருப்திக்கு ஆளாகியுள்ளதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

ஆந்திர, சென்னை மாநிலங்களிடையே உள்ள சித்தூர் எல்

லேத் தகராறு, இரு மாநிலங்களின் முடிவுக்குமே விடப்பட்டிருக்கிறது.

விசால ஆந்திரம் அமையாதது—பலருக்கு ஏமாற்றம்தான் என்று தெரிகிறது.

இந்தியப் பிரதமர் பண்டித நேரு வானொலி மூலம் இது குறித்துப் பேசுகையில், மக்கள் சிபாரிசுகளைக் குறித்துப் பரபரப்படையத் தேவையில்லை எனவும், இந்த சிபாரிசுகளைக் குறித்து மாநில சட்டசபைகள் விவாதித்த பின்னர், மக்கள் சபைக்குத்தான் முடிவெடுக்கும் அதிகாரமிருப்பதாகவும், சிபாரிசுகளை கண்ணியமாகவும், அமைதியாகவும், முழுவதுமாகவும், ஜனநாயக அடிப்படையிலும் நோக்குமாறும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

சிபாரிசுகளில் சில அவருக்கு ஆச்சரியமூட்டியிருக்கிறதாம்!

பல கட்சியினரும் குழுவின் அறிக்கை குறித்துத் தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றனர்.

## சென்னை

இந்த மாநிலம் கீழே கூறப்பட்டுள்ள மாறுதலுக்குட்பட்டு, தற்போதுள்ள பிரதேசங்கள் அடங்கியதாக இருக்கவேண்டும். அந்த மாறுதல்களாவன :—

(அ) தற்போது திருவாங்கூர்-கொச்சி மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்துவரும் அகஸ்தீசுவரம், தோவாளை, கல்குளம், விளவன்கோடு, செங்கோட்டை ஆகிய ஐந்து தாலுக்காக்களும் சென்னை மாநிலத்திற்கு மாற்றப்படவேண்டும்.

(ஆ) மலபார், தென்கன்னடம் மாவட்டங்களும், கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள கொள்ளேகாலம் தாலுகாவும் சென்னை மாநிலத்திலிருந்து பிரிக்கப்படவேண்டும்.

மேலே குறிப்பிட்ட ஐந்து தாலுகாக்களையும் சென்னையுடன் சேர்ப்பதானது, பூமி அமைப்புத் தொடர்ச்சி காரணமாகவும், மொழி, கலாச்சாரத் தொடர்புகள் காரணமாகவும் நியாயமானதாகும். அந்தப் பிரதேசவாசிகள் தெளிவாக வெளியிட்டு வந்துள்ள கோரிக்கையையும் இது பூர்த்திசெய்து வைப்பதாக இருக்கும்.

## கேரளம்

புதிதாக அமைக்கப்படும் கேரள மாநிலம் பின்வரும் பிரதேசங்கள் அடங்கியதாக இருக்கவேண்டும்:—

(அ) சென்னைக்கு மாற்றிவிட உத்தேசிக்கப்பட்டுள்ள ஐந்து தாலுகாக்கள் நீங்கலாக, தற்போதுள்ள திருவாங்கூர்—கொச்சி மாநிலம்;

(ஆ) மலபார் மாவட்டம் (கொச்சின் கோட்டையும் லட்சத்தீவுகளும் உட்பட்டது). தென்கன்னடம் மாவட்டத்திலுள்ள காசர்கோடு தாலுகா, அமின்டிவ் தீவுகள் ஆகியவை.

## கர்நாடகம்

கர்நாடக மாநிலம் பின்வரும் பிரதேசங்கள் கொண்டதாக அமைக்கப்படவேண்டும்.

(அ) தற்போதைய மைசூர் மாநிலம்-பெல்லாரி மாவட்டத்திலுள்ள பின்வரும் பகுதிகள் நீங்கலாக—அப்பகுதிகளாவன: சிருகுப்பா தாலுகா, ஹோஸ்பெட் தாலுகா, மல்லாபுரம் உப-தாலுகாவில் துங்கபத்ரா அணைத் திட்டத்தின் அணைக்கட்டும், மடைகளும் அமைந்துள்ள ஒரு சிறு பகுதி ;

(ஆ) பம்பாய் மாநிலத்தில் கன்னட மொழி பேசப்பட்டுவரும் தார்வார், பீஜப்பூர், வட கன்னடம், பெல்காம், (பெல்காம் மாவட்டத்திலுள்ள சந்த்காட் தாலுகா நீங்கலாக) ஆகிய நான்கு மாவட்டங்கள் ;

(இ) ஐதராபாத்திலிருந்து ரெய்ச்சூர், குல்பர்கா மாவட்டங்கள் ;

(ஈ) சென்னையிலிருந்து தென் கன்னடம் மாவட்டம் (காசர்கோடு தாலுகா நீங்கலாக);

(உ) சென்னை மாநிலத்தின் கோயமுத்தூர் மாவட்டத்திலிருந்து கொள்ளேகாலம் தாலுகா ;

(ஊ) குடகு;

பெல்லாரி மாவட்டத்தின் தென் பகுதியை கன்னடத்திலிருந்து ஆந்திரத்துக்கு மாற்றுவதுபற்றி, இந்தக் கோரிக்கைக் கான எல்லாக் காரணங்களையும் நன்கு ஆராய்ந்து பார்த்தபிறகே, சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாக அறிக்கை கூறுகிறது. துங்கபத்திரா அணைத் திட்டம் ஆந்திரத்துக்கு மிகவும் அதிக முக்யத்துவம் வாய்ந்ததாக இருப்பதும், இந்தப் பிரதேசத்தில் இருமொழிகளும் பேசப்பட்டு வருவதும், ஓரளவு மாறியுள்ள இன்றைய சூழ்நிலையில் நீதிபதி மிஸ்ராவின் தீர்ப்பை புனர் பரிசிலனை செய்வதை நியாயமாக்கும் காரணங்களுள் ஒரு சிலவாகும் என்று, குழு கூறுகிறது.

## ஐதராபாத்

பொது மக்களின் கோரிக்கைக்கு இணங்க பெரிய மாறுதல்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் போது, ஐதராபாத் மாநிலத்தை தற்போதுள்ளபடியே வைத்துக் கொண்டிருப்பதென்பது முடியாது ; ஐதராபாத், செகந்தராபாத் ஆகியவற்றிலுள்ள உருது பேசும் மக்களின் விசேடமான தேவைகளைக் கருத்தில்கொண்டு செய்யப்பட்டுள்ள ஒரு சில ஏற்பாடுகளுக்குட்பட்டு, ஐதராபாத் மாநிலம் பின்வரும் முறைகளில் மாற்றியமைக்கப்படவேண்டும் :—

ரெய்ச்சூர், குல்பர்கா மாவட்டங்களுடன் மராத்வாடா மாவட்டங்களையும் ஐதராபாத் மாநிலத்திலிருந்து பிரித்துவிட வேண்டும்; எஞ்சிய பிரதேசம் ஐதராபாத் என்றே இனியும் அழைக்கப்பட்டு வரவேண்டும்; இந்தப் புதிய மாநிலம் பின்வரும் பிரதே

சங்கள் அடங்கியதாக இருக்க வேண்டும்:—

தற்போதைய ஐதராபாத் மாநிலத்தின் தெலுங்கு மாவட்டங்கள்—அவையாவன: மஹ்பூப் நகர், நல்கொண்டா, வாரங்கல் (கம்பம் உட்பட), கரீம்நகர், அடிலாபாத், நைஜாமாபாத், ஐதராபாத், மொடாக், பிதார் மாவட்டம், நல்கொண்டா மாவட்டத்தில் ஆந்திராவின் கிருஷ்ணா மாவட்டத்தைச் சேர்ந்ததாக இருந்துவரும் முனகாலா திட்டுப் பிரதேசம்.

எஞ்சிய ஐதராபாத் மாநிலம் 1961–ம் ஆண்டிலோ, அந்த ஆண்டு வாக்கிலோ நடைபெறக் கூடிய பொதுத்தேர்தல்களுக்குப் பிறகு, அந்த மாநிலத்தின் சட்டசபை ஐதராபாத் மாநிலம் ஆந்திரத்துடன் சேருவதை, மூன்றில் இரண்டு பகுதி வோட்டுக்களால் ஆதரிக்குமேயானால், ஆந்திரத்துடன் இணைந்து கொள்ளலாம்.

## ஆந்திரம்

ஆந்திர மாநிலம் கீழே கூறப்பட்டுள்ள அற்பமான ஒரு சில மாறுதல்களுக்குட்பட்டு, தற்போதுள்ளபடியே இப்போதைக்கு இருந்துவரவேண்டும்:—

பெல்லாரிமாவட்டத்திலிருந்து சிருகுப்பா, பெல்லாரி, ஹோஸ்பெட் தாலுகாகளும், மல்லாபுரம் உப–தாலுகாவின் ஒரு பகுதியும் ஆந்திராவுக்கு மாற்றப்படவேண்டும்.

கிருஷ்ணா மாவட்டத்தைச் சேர்ந்த முனகாலா திட்டுப் பிரதேசம், ஏற்கனவே கூறப்பட்டபடி, ஐதராபாத்துக்கு மாற்றப்படவேண்டும்.

சென்னை நகரம் விஷயத்தில் தற்போதுள்ள நிலைமையில் மாறுதல் எதுவும் கூடாது; சென்னை நகரத்தின் எதிர்காலம் இறுதியாக முடிவு செய்யப்பட்டு விட்டதாகக் கருதப்படவேண்டும்.

## பம்பாய்

பம்பாய் மாநிலம் குழுவினர், பின்பற்றி வந்துள்ள பொதுக் கோட்பாடுகளுக்கிணங்க, ஒரே மொழி பேசப்படும் பிரதேசத் தொகுதியாக அல்லாமல் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் பேசப்படும் கலப்புப் பிரதேசமாகவே நீடித்திருக்கவேண்டும். இந்த ஏற்பாட்டின் மூலம், பம்பாயின் எதிர்காலம் பற்றிய பிரச்சினையும் சரியானபடி தீர்த்துவைக்கப்பட்டுவிடும்.

புதிதாக அமைக்கப்படும் பம்பாய் மாநிலமானது, தற்போதைய பம்பாய்மாநிலத்திலிருந்து, பானஸ்கந்தா மாவட்டத்தில் அபூ ரஸ்தா தாலுகாவும், கன்னடம் பேசப்பட்டுவரும் மாவட்டங்களான தார்வார், பீஜபூர், வடகன்னடம், பெல்காம் (சாந்த்காட் தாலுகா நீங்கலாக) ஆகியவற்றை நீக்கிய பிறகு எஞ்சியிருக்கும் பிரதேசத்துடன் கூட பின்வரும் பிரதேசங்களும் சேர்ந்ததாக இருக்கவேண்டும்:—

(அ) ஐதராபாத்தில் மராத்தி பேசப்படும் மாவட்டங்கள்-அதாவது உஸ்மானாபாத், பீர், அவுரங்காபாத், பர்பாணி, நாண்டெட்;

(ஆ) சௌராஷ்டிரம் ;

(இ) கட்ச்.

## விதர்ப்பம்

மத்தியப் பிரதேச மாநிலத்தின் மராத்தி பேசப்படும் மாவட்டங்களான புல்தானு, அகோலா, அமராவதி, யோட்மால், வார்தா, நாகபுரி, பாந்ரா, சந்தா ஆகியவை அடங்கியதான புதிய மாநிலமொன்று, விதர்ப்பம் என்ற பெயரில் அமைக்கப்பட வேண்டும்.

## மத்தியப் பிரதேசம்

விதர்ப்ப மாநிலம் ஏற்படுத்தப்பட்ட பிறகு. பின்வரும் பிரதேசங்கள் கொண்ட புதிய மாநிலமொன்று ஏற்படுத்தப்படவேண்டும்; இந்தப் புதிய மாநிலம் மத்தியப் பிரதேசம் என்ற பெயர் கொண்டதாக இருக்கலாம்:—

(அ) மத்தியப் பிரதேசத்தில் எஞ்சியுள்ள மாவட்டங்கள் ;

(ஆ) போபால் முழுவதும், விந்தியப் பிரதேசம் முழுவதும்;

(இ) மத்தியபாரத்-மண்ட்சார் மாவட்டத்தின் ஸுனேல் திட்டுப் பிரதேசங்கள் நீங்கலாக;

(ஈ) இராஜஸ்தானில் கோடா மாவட்டத்தின் ஸிரோஞ்ச் சப்டிவிஷன்.

போபால், விந்தியப் பிரதேசம், மத்திய பாரத் ஆகிய மாநிலங்கள் மூலவளம் நிறைந்த பெரியதொரு பிரதேசத்துடன் சேருவதால் பயன்பெறக்கூடும். இந்தப் புதிய மாநிலத்தில் ஜபல்பூர் நகரம் மத்தியமானதொரு இடத்தில் இருக்குமாகையால், தலைநகராகக் கொள்வதற்கு ஏற்றதாக இருக்கும்.

## இராஜஸ்தான்

புதிதாக ஏற்படுத்தப்படும் மத்தியப் பிரதேச மாநிலத்தில் ஸிரோஞ்சைச் சேர்ந்த பிறகு, இராஜஸ்தான், எஞ்சியுள்ள பிரதேசமும், புதிதாகச் சேர்க்கப்படும் பின்வரும் பிரதேசங்களும் கொண்டதாக இருக்கவேண்டும்!—

(அ) அஜ்மீர்;

(ஆ) பம்பாயில் பனாஸ்கந்தா மாவட்டத்தின் அபூ ரஸ்தா தாலுகா, மண்ட்சார் மாவட்டத்தின் சுனேல் திட்டுப் பிரதேசம், பஞ்சாபைச் சேர்ந்த ஹிஸ்ஸார் மாவட்டத்தின் லோஹாரு உப-தாலுகா.

பம்பாயிலிருந்து பனாஸ்கந்தா மாவட்டத்தின் அபூ ரஸ்தா தாலுகாவை இராஜஸ்தானுக்கு மாற்றுவது, மொழிப்பற்றுதல் காரணமாகவும், அந்தப் பிரதேச மக்கள் ஓயாமல் வற்புறுத்தி வந்திருப்பதாலும் நியாயமானதேயாகும்.

## பஞ்சாப்

பஞ்சாபைப் பிரிப்பதற்கும், பெப்சுவையும், இமாசலப் பிரதே

சத்தையும் தற்போதுள்ளபடியே வைத்திருப்பதற்கும் ஆதரவு காட்டி வற்புறுத்தப்பட்டு வந்துள்ள மொழிபற்றிய காரணங்களையும், பிறவற்றையும், கமிஷன் கவனமாய் ஆராய்ந்து பார்த்தது. இந்தக் கோரிக்கைகளில் எதையும் ஏற்றுக்கொள்வது கடினமென்று குழு கருதுகிறது. மொழியின் தன்மையையும், பஞ்சாபில் போக்குவரத்து சாதனத் தேவைகளையும் கருத்தில் கொண்டு பார்த்தால், பஞ்சாபி பேசும் மாநிலமொன்றை ஏற்படுத்துவதற்கு நியாயமே இல்லை; அம்மாதிரியானதொரு மாநிலத்தை ஏற்படுத்துவதால் இந்தப் பிரதேசத்தின் பொருளாதார வாழ்க்கை சீர்குலைந்து விடக் கூடும். பஞ்சாபில் பேசப்படும் மாநிலம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை முக்கியமாக இரண்டு விஷயங்களால் அடிபட்டுப்போய்விடுகிறது ; முதலாவதாக அந்தப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் பொதுவான ஆதரவு இதற்கு இல்லை ; இரண்டாவதாக, சச்சரவுக்குக் காரணமாக இருந்த எந்த விஷயங்கள் காரணமாக, பஞ்சாபி பேசப்படும் தனி மாநிலம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை எழுந்ததோ, அந்த விஷயங்களில் ஒன்றுகூட இதனால் விலக்கப் பட்டுவிடப் போவதில்லை. அத்தகையதொரு மாநிலத்தை ஏற்படுத்துவதால், மொழிப் பிரச்சினையோ, வகுப்புப் பிரச்சினையோ தீர்ந்துவிடப் போவதில்லை; அதற்கு மாறாக, தற்போதிருந்துவரும் உணர்ச்சிகளை மேலும் வளர்ப்பதாகவே அது இருக்கும்.

பெப்சுவும், இமாசலப்பிரதேசமும் மிகச் சிறியவையாக இருப்பதால் தனித் தனியே இருந்துவர முடியாது. பெப்சு, இமாசலப் பிரதேசம் ஆகியவற்றிற்கும், தற்போதைய பஞ்சாப் மாநிலத்துக்கும் இடையே இருந்துவரும் பொருளாதார, நிர்வாகத்தொடர்புகளைக் கவனிக்கும்போது, இந்த இரண்டு மாநிலங்களையும் பஞ்சாப் மாநிலத்துடன் இணைப்பதே நியாயமாகும்.

புதிய பஞ்சாப் மாநிலம் பெப்சுவும், இமாலயப் பிரதேசமும் அதனுடன் சேர்ந்த பிறகு, நன்கு இணைந்ததொரு பிரதேசமாக இருக்கும் ; இந்தப் பிரதேசத்திலுள்ள பல்வேறு சர்க்கார்கள் தற்போது பரிசிலனைசெய்து கொண்டிருக்கும் தீவிரமான அபிவிருத்தித் திட்டங்களைச் சரிவர நிறைவேற்றி வைக்கக்கூடிய நிலைமையில் இருக்கும்.

## உத்தரப் பிரதேசம்

உத்தரப் பிரதேசத்தைப் பிரிப்பதற்கான முகாந்திரமெதுவும் இல்லை ; இந்த மாநிலம் தற்போதுள்ளபடியே இருந்துவர வேண்டும்.

## பீகார்

தென் பீகாரில் ஜார்கண்ட் மாநிலமொன்றை ஏற்படுத்துவதற்கு அவசியமெதுவுமில்லை; அது விரும்பத் தக்கதுமல்ல; ஆனால்

இந்தப் பிரதேசத்தின் பிரத்தியேகமான தேவைகள் கவனிக்கப்படவேண்டும்.

## மேற்கு வங்காளம்

மேற்கு வங்காளத்தின் தொடர்பு அற்றிருக்கும் வட பகுதிக்கும், அந்த மாநிலத்தின் பிற பகுதிகளுக்குமிடையே பூமி அமைப்பு ரீதியான தொடர்பு இருப்பது அவசியமாகிறது; இதற்கான ஏற்பாட்டைச் செய்தாக வேண்டும். ஆகவே, மஹாநந்தா நதியின் கிழக்குப் பக்கத்தில் பூர்னியா மாவட்டத்தின் ஒரு பகுதியை, இதற்கு அவசியமான குறைந்தபட்ச பிரதேசமாக இருப்பதால், பீகாரிலிருந்து மேற்கு வங்காளத்துக்கு மாற்றிவிட வேண்டும்.

## அசாம்

அசாம், அதனுடைய பூகோள ரீதியான நிலைமையையும், மக்களின் பூர்வீகக் கலாச்சார வரலாற்றையும் கருதி கலப்பு மொழி மாநிலமாகவே நீடித்திருக்க வேண்டியது அவசியமாகிறது. அசாமில் மலை ராஜ்யமொன்றை ஏற்படுத்துவது காரிய சாத்தியமானதல்ல; மேலும், அசாமின் தனித் தன்மைகளையும், சூழ்நிலைகளையும் கவனிக்கும்போது தனியான மலை ராஜ்யமொன்றை ஏற்படுத்துவதற்கு அவசியமும் இல்லை; ஆனபோதிலும், மலை ஜில்லாக்களின் அபிவிருத்தியில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்;

திரிபுரா, அசாமில் சேர்க்கப்படவேண்டும்.

வடகிழக்கு எல்லை ஏஜென்சி சம்பந்தமாகத் தற்போதுஇருந்து வரும் ஏற்பாடு நீடித்துவரவேண்டும்.

## ஒரிசா

1936-ம் வருடம், நீண்ட காலம் விவரமான பரிசீலனை நடத்திய பின்னர், நிர்ணயிக்கப்பட்ட ஒரிசாவின் எல்லைகளில்எவ்வித மாறுதல்களும் செய்யப்பட வேண்டிய தேவை இல்லை.

## ஜம்மு—காஷ்மீர்

ஜம்மு—காஷ்மீர் பற்றி எவ்வித சிபாரிசுகளும் செய்யப்படவில்லை.

இதுவரை பிரஸ்தாபிக்கப்படாத யூனிட்டுகளும், பகுதிகளும் மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகத்திலிருந்துவரும்; இவைகள் பிரதேசங்கள் (டெரிட்டரிகள்) என்றழைக்கப்படும்.

## டில்லி

டில்லி மத்திய சர்க்காரின் இருப்பிடமாகத் தொடர்ந்து இருக்க வேண்டுமானால், அது சரியான கொள்கையை அடிப்படையாகக் கொண்டதும், காரியாம்சத்தில் நிர்வாக சாத்தியமானதுமோர் மாதிரியில் அமைக்கப்படவேண்டும்.

## மணிப்பூர்

தற்காலத்துக்கு மணிப்பூர் மத்திய சர்க்காரின் நிர்வாகத்துக்குட்பட்ட பிரதேசமாக இருக்கவேண்டும். கடைசியாக இதை அசாம் மாநிலத்துடன் இணைப்பதே குறிக்கோளாக இருக்கவேண்டும். ★

—"நம் நாடு"

# 300 மக்கள் வாழும் கிராமங்களிலெல்லாம் ஆரம்பக் கல்வி

## 5-வது வகுப்பு முதல் ஆங்கில போதனை முக்கியம்

### கல்விக் கமிட்டி சிபார்சுகள்

ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் சம்பந்தமான கடமைகளையும், அதிகாரங்களையும் ஜில்லாபோர்டுகளிடமிருந்து புதிதாக நிறுவப்படும் பிராந்திய போர்டுகளுக்கு மாற்றவேண்டும்; 'செகண்டரி' பள்ளிகளில் நடுத்தர படிவங்களையும், ஆரம்ப வகுப்புகளையும், ஆதாரக் கல்வி முறைக்கு மாற்ற வேண்டும் என்று சென்னை ஆரம்பக் கல்வி சீர்திருத்தக் கமிட்டி சர்க்காருக்கு யோசனை கூறியிருப்பதாகத் தெரிகிறது.

கமிட்டியின் அறிக்கை உத்தியோக பூர்வமாக வெளியிடப்படவில்லை. பின்வரும் சிபாரிசுகள் செய்திருக்கலாமென்று சொல்லப்படுகிறது:

கமிட்டி மெம்பர்கள் வருமாறு:—டாக்டர் ஆர். எம். அழகப்ப செட்டியார—தலைவர்; திரு எஸ். மீனாட்சி சுந்தரம் (ஈரோடு); திரு கே. அருணாசலம் (கோவை); திரு எம். அருணாசலம் (திருமங்கலம்); திரு வி. எஸ். கோபால கிருஷ்ண அய்யர் (சென்னை).

தனிப்பட்டோர் நிர்வாகத்தின் கீழுள்ள ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் தருந்த முறையில் நிறுவப்பட்ட நிர்வாகக் கமிட்டி அமைக்கவேண்டுமென்று கமிட்டி சிபாரிசு செய்திருப்பதாகத் தெரிகிறது. நிர்வாகக் கமிட்டியில் சர்க்கார் நியமன மெம்பர்களுமிருக்க வேண்டுமென்று கமிட்டி கருதுவதாகவும் தெரிகிறது. பல பள்ளிக்கூடங்களை வைத்து நடத்தும் ஸ்தாபனங்கள் ஆரம்பப்பள்ளிகளுக்காக மட்டும் தனி நிர்வாக மன்றம் அமைக்க வேண்டுமென்றும் யோசனை சொல்லியிருப்பதாகத் தெரிகிறது.

கட்டாய ஆரம்பக் கல்வி முறை வெற்றிகரமாக நடக்கவில்லை என்று கமிட்டி கூறிவிட்டதாக நம்பப்படுகிறது. அதற்குக் குழந்தைகளின் பெற்றோருடைய வறுமையும், அசட்டையும் காரணமாகுமென்று கமிட்டி எடுத்துக் காட்டியிருக்கிறதாம்.

இனிமேல் ஆரம்பப் பள்ளிக்கூடங்களை நகரசபைகளும், பிராந்திய போர்டுகளும் மட்டுமே திறக்க அனுமதிக்க வேண்டுமாம்.

## முதல் வகுப்புகளுக்கு ஆசிரியைகள்

கமிட்டி மேலும் செய்திருப்பதாகக் கூறப்படும் சிபார்சுகள் :

கூடுமான வரையில் முதல் வகுப்பிலிருந்து மூன்றும் வகுப்பு வரை ஆசிரியைகளேயே நியமிக்க வேண்டும். போதனு முறைப் பயிற்சி பெருதவர்களை முழுநேர ஆசிரியர்களாக நியமிப்பதைக் காட்டிலும் மணமான மாதரை "சில மணி நேர" ஆசிரியைகளாக நியமிக்கலாம்.

ஆசிரியர்களின் சம்பளவிகிதங்களையும் உயர்த்தவேண்டும்.

## புள்ளி விவரம்

பள்ளிக்கூடம் செல்லக்கூடிய 6 முதல் 12 வரை வயதான சிறுவர்கள் 2,459,000பேரும், பெண்கள் 2,498,000 பேரும் மொத்தம் உள்ளனர். ஆனுல்1,750,000 சிறுவரும், 1,070,000 பெண்களும் மட்டுமே பள்ளிக்கூடம் போகிருர்கள். அதாவது குத்துமதிப்பாக 71·2 சதவிகிதம் சிறுவரும், 42 8 சதவிகிதம் பெண்களும்தான் படிக்கிருர்கள். இது 1954-ம் வருஷம் மார்ச் மாதம் 31-ந் தேதி இருந்த நிலவரம். இந்த சதவிகிதமும் ஜில்லாவுக்கு ஜில்லா மாறுகிறது. மலபார் ஜில்லாவில்தான் எல்லா ஜில்லாக்களேயும்விட அதிகமான பேர் படிக்கிருர்கள். சேலம் ஜில்லாதான் கடைசி.

மொத்தம் 21,423 ஆரம்பப் பள்ளிகளும். 905 அகாரப்பள்ளிகளும் இருந்தன. அவற்றில் 2388 உயர்தர ஆரம்பப் பள்ளிகள் (5 வகுப்பு வரை உள்ளவை), 105 உயர்தர ஆதாரப் பள்ளிகள். 1954-ம் வருஷம் மார்ச். 31-ந் தேதியன்று ஓராசிரியர் பள்ளிகள் மொத்தம் 1921 இருந்தன. வேலையின்மை நிவாரண திட்டத்தின்கீழ்ப் புதிதாக நிறுவப்படும் ஓராசிரியர் பள்ளிகள் கணக்கு இதில் சேரவில்லை.

சர்க்கார் 1207 ஆரம்பப்பள்ளிகளேயும், ஆதாரக் கல்விப் பள்ளிகளேயும் நடத்துகிருர்கள். மற்ற ஸ்தாபனங்கள் நடத்தும் ஆரம்பப் பள்ளிகள், ஆதாரக் கல்விப்பள்ளிகள் விவரம் வருமாறு:—ஜில்லா போர்டுகள் 8099, பஞ்சாயத்துகள் 964, நகரசபைகள் 995, சர்க்கார் மான்யம் பெறும் தனிப்பட்ட "மிஷன்"பள்ளிகள் 2946, சர்க்கார் மான்யம்பெறும் "மிஷனல்லாத" தனிப்பள்ளிகள் 7178, மான்யம் பெருத தனி "மிஷன்" பள்ளிகள் 27, "மிஷனல்லாத" பள்ளிகள் 7.

1954 மார்ச் 31-ந்தேதி வேலையிலிருந்த மொத்தம் ஆசிரியர்கள் தொகை 95,616. அதில் பயிற்சி பெருத ஆசிரியர்கள் நூற்றுக்கு நான்கே பேர்தான். இந்தியாவின் மற்றப் பகுதிகளுடன் ஒப்பிடுகையில் இதுதான் மிகவும் குறைச்சலான விகிதாசாரமாகும்.

## விளையாட்டு வசதியில்லை

2000 பள்ளிகளில் தோட்ட வேலைக்கான வசதிகள் இல்லை.

20,000 பள்ளிகளில் குழந்தைகள் விளையாடுவதற்கான இடம் இல்லை. அப்படி இருக்குமிடங்களிலும் ஒரு ஏகராவுக்குக் குறைவான இடமிருப்பதால் விளையாடுவதற்குப் போதாது.

## கட்டாய இலவசக் கல்வி

ஐந்து வயது நிறைந்த எல்லாக் குழந்தைகளுக்கும் 14 வயது நிரம்பும்வரை கட்டாய இலவசக் கல்வியளிக்க அரசாங்கம் பிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டும். 5 முதல் 14 வயது வரையுள்ள ஆண், பெண் குழந்தைகள் மொத்தம் 63,00,000 இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. அதில் 32,00,000 பேர்தான் பள்ளிகளில் படிக்கிறார்கள். எனவே, குழந்தைகள் தன்னிச்சையாகப் பள்ளிக்கூடங்களில் சேருவதற்கான வழி வகைகள் காணப்படவேண்டும்.

## கிராமங்களுக்குப் பள்ளிகள்

300 முதல் 500 வரை ஜனத்தொகையுள்ள ஒவ்வொரு கிராமத்துக்கும் பள்ளிக்கூடம் வைத்துத் தருவது முதல்வேலையாகும். கூடுமானால் அந்தக் கிராமத்திலேயே பள்ளிக்கூடம் வைக்கவேண்டும். இல்லையேல், அக் கிராமத்துக்கு அருகிலேயே வைக்க வேண்டும்.

## சூழ்நிலை முக்கியம்

குழந்தைகள் மனதைக்கவரும் வகையில் பள்ளிகளின் சூழ்நிலையும், போதனை முறையும் அபிவிருத்தி செய்யவேண்டும். அப்போது குழந்தைகள் நிறையச் சேருவதற்கு வழியுண்டாகும். இலவசமாகப் பகல் உணவு போடவும், புத்தகங்கள், "சிலேட்டுகள்" வழங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். இது பெரிய பிரச்னை என்பதில் சந்தேகமில்லை. ஆனால் காலதாமதமின்றி எவ்விதமாவது இதற்குஆரம்பம்செய்யவேண்டும் எங்கெந்தக் கிராமங்களில் இதற்காகும் செலவில் பாதியை ஏற்றுக்கொள்ள மக்கள் முன் வருகிறார்களோ அங்கெல்லாம் இத்திட்டத்தை ஆரம்பிக்கலாம்.

## மலிவான பள்ளிகள்

பள்ளிக்கூடங்களுக்குத் தகுந்த கட்டிடங்கள் கட்டுவதற்கு உடனடியாக ஆரம்பம் செய்யவேண்டுமென்று கமிட்டி கருதுகிறது. அதிகச் செலவு பிடிக்காததும், நல்ல காற்றோட்டமுள்ளதும், ஓரேயளவு வெளிச்சமுள்ளதுமான கட்டிடங்களை எழுப்ப வேண்டும். தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் கிடைக்கும் உதவிகளை இதற்காகப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

குழந்தைகளுக்கான விளையாட்டு மைதானம், தோட்டக்கால்களைப் பெறுவதற்கு நில நன்கொடை இயக்கத்தைப் பயன் படுத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் தகுதியான நூல் நிலையம் அவசியம்.

ஓராசிரியர் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு ஜாகை வசதி செய்து தரவேண்டும். ஆசிரியர்கள் இங்

மாதிரி பள்ளிகளில் சேவை புரிய முன் வருவதற்கு இது தூண்டு கோலாக இருக்கும்.

## கட்டாய ஆங்கிலம்

ஆரம்பக் கல்விப் பள்ளியில் 8 வருஷ காலம் நன்கு இணைக்கப் பட்ட படிப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் வயது 5 என நிர்ணயித்துள்ளது. உயர்தர ஆரம்பப் பள்ளிகளும், நடுத்தரப் பள்ளிகளும் ஆதாரக் கல்விப் பள்ளிகளாக மாற்றப்படும் வரையில், ஆரம்பப்பள்ளி வகுப்புகளுக்கும், நடுத்தரப் பள்ளி படிவங்களுக்கும் ஒரே சீரான பாடமுறை வகுக்கப்படவேண்டும். ஐந்தாம் வகுப்பு முதல் எட்டாவது வரை எல்லா மாணவருக்கும் கட்டாயம் ஆங்கிலம் போதிக்கலாம்.

எட்டாவது வகுப்பு படிப்பு முடிவில் "சர்க்கார்" பரீட்சை வைப்பதும் பள்ளிக்கூடங்களில் மேற்கொண்டு பரீட்சிக்காமலே 4-வது படிவத்தில் சேர்த்துக் கொள்ள மாணவனைத் தகுதியாக்கும் அத்தாட்சிப் பத்திரம் (இ. எஸ். எல். ஸி. சர்டிபிகேட்) வழங்கும் முறையும் நீடிக்கலாம்.

இப்போது அமுலிலுள்ளதும் 1939-ல் கொண்டுவரப்பட்டது மான ஆரம்பப்பள்ளிப் பாடத் திட்டத்தை சீர்திருத்தியமைக்கும் பிரச்னையை ஒரு "அட் ஹாக்" கமிட்டியின் ஆலோசனைக்கு விட்டுவிடலாம்.

## ஆட்சேபக் குறிப்பு

திரு எம். அருணசலம் சமர்ப்பித்திருக்கும் ஆட்சேபக் குறிப்பில் ஆதாரக் கல்விக்குப் படிப்பு முறையை மாற்றக் கூறப்பட்டிருக்கும் வழிவகைகளின் குணதோஷங்களைப் பரிசீலித்துள்ளாரென்று தெரிகிறது.

தற்போதைய ஆரம்பக் கல்வி முறையைப் பரிசீலித்து, அரசியல் சட்டத்தில் நிர்ணயித்திருப்பதுபோல் எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவச ஆரம்பக் கல்வி கற்பிக்கும் லட்சியத்தை அடைய வழிமுறைகளை யோசனை கூறவென இக்கமிட்டி சென்ற வருடம் நவம்பர் மாதம் நியமிக்கப்பட்டது. இந்த அக்டோபர் இரண்டாம் தேதியன்று கமிட்டி தனது யாதாஸ்தை சர்க்காருக்கு சமர்ப்பித்தது. ★

—ரு. மி

# THE MADRAS STATE

# Aided Elementary School Managers Association

94/95 New Street, Mannady, G. T. Madras—1.

Resolutions **Passed** on 1–10–55.

The following resolutions were passed at the meeting of the Executive Committee of the above association held on 1–10–55 at Rajamannar Chettiar Elementary School, New Street, Mannady, Madras-1.

## THE RESOLUTIONS

1. This Association strongly protests against the G. O. Ms. No. 1546 Education dated 14–9–55 as it is in contravention of the assurance given by the Government in para 6 of the G. O. No. 926 dated 19th May 1955, that the fee income lost by the Managements of Elementary and Secondary schools **will be made good to them in full.**

The Association views with alarm the implication contained in para 3 of the G. O. No. 1546 which seeks to pay the compensation in respect of all concessions including the Harijan concession and N. G. O. concession at the new rates contained in para I of the said G. O.

It is against all principles of equity and justice for the Government to implement the G. O. 1546 for the year 1955–56 as the managements have made the concessions for the year in full faith that full fee compensation will be given to schools at the actual rates charged by the schools.

This Association regretfully points out to the Government that it will be impossible for the Managements of schools to continue to run the schools, unless the Government immediately modifies the G. O. 1546 so as to pay the compensation in respect of all concessions in the following basis :—

In respect of old schools functioning before 19th May 1955 the rate of compensation will be at the average of the last three years rates of schools fees charged by them, irrespective of the areas city, municipal or non-municipal–where the schools are located.

In respect of schools opened after 19th May 1955 the rate of compensation in respect of all concessions will be on the basis of the average rates of schools fees obtaining in the old schools in the locality where the new schools have been opened.

This Association sees no reason for the Government to interfere with the discretion of the managements of the schools in the matter of special fees'.

In respect of the number of instalments of fee collection this Association points out that the practice obtaining in schools at present may be allowed to continue.

2. This Association authorises the following committee to wait in deputation on the Honourable Chief Minister, the Minister for Education and the Director of Public Instruction to present and emphasise the views of the Association in the matter and to take such other suitable action as the Committee may decide to implement the above resolution.

The following are the members elected to serve in the above mentioned Committee :—

1. Sri. P. Veeraraghavan.
   Editor, 'Ele, Education'

2. Sri. A. K. S. Sarma.
   Editor, 'Atharak kalvi'

3. Sri. A. R. Seshachalam.
   General Secretary, Madras State Managers' Association

4. Sri. V. Sundaramoorthy Chettiar.

Councillor, Corporation of Madras & Vice President, Madras Dist., Managers' Association

5. Sri. N. A. Natesa Mudaliar.

Secretary, Madras Dist., Managers' Association.

3. Resolved that the educational fee concession to Vanniakula Kshatriyas as promised for 54-55 be paid immediately since the schools feel the financial strain as it is long over due.

4. Resolved that in view of unworkable situation rising out of deputing non-basic teachers for basic training course, the managements find it difficult to depute teachers for basic training without appointment of substitutes on whose behalf grants also should be assessed.

5. Resolved that in view of the representation made by the District Manager' Association Madurai, that the Director be requested to issue necessary instruction to the officers concerned to immediately pay off to the management, the poor girls' compensation for the years 1954-55.

6. Resolved that in view of the monthly teaching grant bills as late as the last week of each month, though dated before 15th of each month, the Director be requested to issue necessary instructions to the District Officers for releasing the bills by the 15th of each month as adhearing to the original G. O. on the subject.

7. Resolved that in view of the financial strain the Director be requested to cause the D. E. Os. for releasing the compensation bills by the 15th of the succeeding month of each quarter.

8. Resolved that the Government be requested to communicate to the Districts and Provincial Managers' Association the copies of G. O. s' pertaining to education as and when they are issued.

# சென்னை மாநில
# எய்டட் பள்ளி மானேஜர்கள் சங்கம்

94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை–1.

## 1–10–55–ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1–10–55 அன்று மாலை, மேற்படி சங்கத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம், சென்னை மண்ணடி, புதுத் தெரு, இராஜமன்னார் செட்டியார் ஆரம்பப் பாடசாலையில் சங்கத்தின் தலைவர் திரு. வீர ராகவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு, மதுரை முதலிய மாவட்டங்களிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

### தீர்மானங்கள் :

1. சென்னை அரசாங்கத்தால் 14–9–55–ல் பிறப்பிக்கப்பட்டிருக்கிற ஜி. ஓ. எம். எஸ். நெம்பர் 1546 என்னும் உத்தரவை இந்தச் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. ஏனென்றால், இந்த உத்தரவு, 19–5–55–ல் ஜி. ஓ. நெம்பர் 926–ன் மூலம், எட்டாவது வகுப்பு வரையில் எல்லா ஏழைப் பிள்ளைகளுக்கும் கல்வி இலவசமாகிற காரணத்தால் பள்ளி நிர்வாகிகளுக்கு ஏற்படுகிற நஷ்டம் முழுவதையும் அரசாங்கத்தார் ஈடு கட்டித் தருவார்கள் என்று கொடுக்கப்பட்டிருந்த உறுதி மொழியை மீறுவதாக அமைந்திருக்கிறது.

ஹரிஜன் மாணவர்களின் சம்பளச் சலுகை, என். ஜி. ஓ. மாணவர்களின் சம்பளச் சலுகை ஆகியவை உட்பட எல்லாச் சம்பளச் சலுகைகளுக்கும் நஷ்ட ஈடு, ஜி. ஓ. எண் 1546–ன் 1–வது பாராவில் குறிப்பிட்டுள்ள புதிய விகிதங்களின்படிதான் அளிக்கப்படும் என்று, அதே ஜி. ஓ. வின் 3–வது பாராவில் குறிப்பிட்டிருப்பதைக் கண்டு இந்தச் சங்கம் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைகிறது.

தாங்கள் நடைமுறையில் வசூலித்து வரும் கட்டண விகிதங்களின்படியே ஏழை மாணவர்களின் சம்பளச் சலுகை நஷ்ட ஈடு அரசாங்கத்தால் அளிக்கப்படும் என்று எண்ணி, பள்ளிக்கூட நிர்வாகிகள், 1955–56–ஆம் ஆண்டுக்குரிய சம்பளச் சலுகைகளை, அந்த அடிப்படையிலேயே வழங்கியிருக்கிறார்கள். அப்படியிருந்தும்

புதிய உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்கள், 1955–56–ஆம் ஆண்டுக்கும் பொருந்தும் என்று புதிய உத்தரவில் தெரிவிக்கப்பட்டிருப்பது நீதிக்கும் நேர்மைக்கும் முற்றிலும் புறம்பானது என்பதை இந்தச் சங்கம் தெரிவித்துக்கொள்கிறது.

கீழே தரப்பட்டுள்ள முறைப்படி நஷ்ட ஈட்டைத் தருவதற்கும், அதற்கு ஏற்ற வகையில் ஜி. ஓ. எண் 1546–ஐ மாற்றி அமைப்பதற்கும் அரசாங்கத்தார் உடனடியாக முன்வந்தாலொழிய, எய்டட் பள்ளி மானேஜர்களால் தங்கள் பள்ளிக்கூடங்களைத் தொடர்ந்து நடத்துவது இயலாத செயலாகிவிடும் என்பதை, இந்தச் சங்கம், மிக மிக் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறது.

நஷ்ட ஈடு தரப்படவேண்டிய முறை:— 19–5–55–க்கு முன்னுலிருந்து பணியாற்றி வரும் பள்ளிகளுக்கு, கடந்த மூன்றாண்டுகளில் அவை வசூலித்து வந்த பள்ளிக் கட்டணங்களின் சராசரியைக் கணக்கிட்டு, அந்த சராசரி கட்டண விகிதத்தின்படி நஷ்ட ஈடு அளிக்கப்படவேண்டும். சென்னை நகரத்தில் உள்ள பள்ளிகள், முனிசிபல் எல்லைக்குள் உள்ள பள்ளிகள், முனிசிபல் அல்லாத எல்லைக்குள் உள்ள பள்ளிகள் என்கிற பாகுபாட்டை இங்கே கவனிக்கவேண்டிய அவசியமில்லை.

19–5–55–க்குப் பிறகு தொடங்கப்பட்ட பள்ளிகளுக்கு, அவை தொடங்கப்படுகிற வட்டாரத்தில் ஏற்கெனவே உள்ள பழைய பள்ளிகளுக்குத் தரப்படுகிற நஷ்டஈட்டின் சராசரியைக் கணக்கிட்டு, அதன்படி நஷ்டஈட்டை அளிக்கவேண்டும்.

சிறப்புக் கட்டணங்களைப் பற்றிய பிரச்சினையில், பள்ளிக்கூட நிர்வாகிகளை, உசிதம்போல் நடக்க விட்டுவிடவேண்டுமே தவிர, அந்தப் பிரச்சினையிலும் அரசாங்கத்தார் தலையிடுவதற்கு எவ்வித நியாயமும் இருப்பதாக இந்தச் சங்கம் கருதவில்லை.

ஆண்டுக்கு எத்தனை முறை கட்டணங்களை வசூலிப்பது என்கிற பிரச்சினையில், ஆங்காங்கே ஏற்கெனவே இருந்துவரும் பழக்கத்தை அப்படியே ஏற்றுக்கொள்வதே முறை என்று சங்கம் கருதுகிறது.

2. கனம் முதலமைச்சர், கனம் கல்வியமைச்சர், கல்வி இலாகா டைரக்டர் ஆகியவைகளைப் பேட்டி கண்டு மேற்படி தீர்மானத்தின் கருத்தை வற்புறுத்திச் சொல்லவும், இது சம்பந்தமாகத் தேவைப்படும் பொருத்தமான வேறு நடவடிக்கைகளை எடுக்கவும், கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை இந்தச் சங்கம் தேர்ந்தெடுக்கிறது.

1. திரு. A. K. S. சர்மா
2. திரு. N. A. நடேச முதலியார்
3. திரு. ஏ. ஆர். சேஷாசலம்
4. திரு. பி. வீரராகவன்
5. திரு. வி. சுந்தரமூர்த்தி செட்டியார்

3. தென்னாற்காடு போன்ற மாவட்டங்களில் வன்னிய குல க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு 1954,55-க்கு நஷ்டஈடு, எயிடட் பள்ளிகளுக்குக்கொடுப்பதாக அரசாங்கம் உத்தரவளித்தும், இதுவரையிலும் பள்ளிகளுக்குக் கொடுக்கப்படாமையால் அந்த நஷ்டஈட்டை உடனடியாகக் கொடுக்கும்படி அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்கிறது.

4. பேசிக் கல்விமுறை அமுலில் இருக்கும் இடங்களில் பேசிக் அல்லாத பாடசாலை ஆசிரியர்களை, பேசிக் பயிற்சிக்கு அனுப்பிவிக்கும் பொழுது, அவர்களுக்குப் பதிலாக ஆசிரியர்களை வைத்துக்கொள்ள அனுமதியையும், அவர்களுக்குண்டான கிராண்டையும் கொடுக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

5. பாடசாலைகளுக்கு மாதாந்திர கிராண்ட் பிரதி மாதம் 15-ந் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டுமென்று, அரசாங்க உத்தரவிருந்தும் பல ரேஞ்சுகளில் ஒழுங்காக கிராண்ட்டுகள் கிடைப்பதில்லை. அப்படியின்றி, ஒழுங்காக பிரதி மாதம் 15-தேதிக்குள் மாதாந்திர கிராண்டை அளிக்கும்படி அரசாங்கத்தார் கல்வி அதிகாரிகளுக்கு உத்தரவிடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. N. G. O., அரிஜன், ஏழைப் பெண்கள் ஆகிய இவர்களுக்கு கொடுக்கப்படும் நஷ்ட ஈட்டுத்தொகையை 3 மாதத்திற்கு ஒருமுறை ஒழுங்காகப் பள்ளிகளுக்குக் கொடுக்கும்படி அரசாங்கத்தார் கல்வி அதிகாரிகளுக்கு உத்தரவிடும்படி கேட்டுக் கொள்கிறது.

7. அரசாங்கத்தாரால் அவ்வப்பொழுது வெளியிடப்படும் ஆரம்பக்கல்வி சம்பந்தப்பட்ட உத்தரவுகளை சென்னை மாநில மானேஜர்கள் சங்கத்திற்கும், ஜில்லா மானேஜர்கள் சங்கத்திற்கும், ஒழுங்காக அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# குழப்பித் தொலையாதீர்

அப்பப்பா! தேசியத் தலைவர்கள், மந்திரிகளானதும் ஆனார்கள்—மனம்போன போக்கில் கல்வித் துறையில் செய்யும் சீர்திருத்தங்களுக்குக் கணக்கு வழக்கில்லை!!

தங்கள் காலத்தில் செய்யப்பட்டது என்று இருக்கவேண்டும் என்பதற்காக ஏதாவது ஒரு 'புதிய காரியத்தைச் செய்ய முயன்று, திண்டாட்டத்தில் தள்ளுகிறார்கள், நம்மை!

செய்யவேண்டிய புதுமைகள் எவ்வளவோ இருக்கிறது, சமூகத்தில்—பாரம்பரியமாக இருந்துவரும் அந்தப் பழமைகளை நீக்கிப் புகழ் பெறுவோமே என்று புறப்படுவதில்லை, 'கனம்'கள்!

எவர் வந்தாலும், இந்தக் கல்வித்துறைதான், கண்ணில் படுகிறது—அது சொள்ளை இது சொட்டை! வெள்ளையன் படிப்பு முறை வேண்டாம்! புதிய மாறுதல் பாரீர்! ஆதாரக் கல்வி இதோ கேளீர்!—இப்படி, அடிக்கடி, ஏதாவது நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது நாட்டில்.

இதனால் கல்விமுறை ஆண்டுக்காண்டு மாறுகிறது.

ஒரு ஆண்டில், ஒரு மாணவன் இந்திய சரித்திரம்—பூகோளம்—விஞ்ஞானம்—ஆகியவைகளைத் தனித்தனியாகப் படித்துப் பரீட்சை எழுதுவான்!

அடுத்த ஆண்டில், அதே வகுப்புக்கு வரும் இன்னொரு மாணவனுக்கு, பூகோளமோ, சரிதமோ, விஞ்ஞானமோ தனித்தனியாகச் சொல்லிக்கொடுக்கப் படாமல், எல்லாம் சேர்ந்து 'ஒரு அவியல்' இருக்கும்! அதற்கு 'சோஷியல் ஸ்டடி' என்னும் பெயரிடப்பட்டிருக்கும்!

இதனால், புத்தகம் போடுபவர்களுக்கு வேட்டையே தவிர, ஆசிரியர்களும் அதைவிட மாணவர்களும் அடையும் அல்லல்—அளவில!

இப்படி மாறுதலைத்தான் செய்கிறார்களே, மந்திரிமார்கள்—அப்படிச் செய்யும்போதாவது, ஆசிரியப் பெருமக்களைக் கலந்தோ, பள்ளிக்கூடப் பேரறிஞர்களிடம் விபரங்கள் பெற்றோ செய்கிறார்களா என்றால், அதுவுமில்லை. 'கனம்' என்று, மந்திரி நாற்காலியில் உட்காருவதாலேயே. உலக மேதையாகி விட்டோம் என்றொரு பித்துக்குணம் பிறந்துவிடுகிறது!

சரித்திரம் என்பது ஒருமுறை நிகழ்ந்த சம்பவங்களின்

தொகுப்பு, எதிர்கால உலகுக்கு ஒரு கண்ணாடி. இப்படிப்பட்ட சரித நூல்களைப் படிப்பதால் மாணவன் மனப்பக்குவம் பெறுகிறான்! சீசர், அலைகடலைத் தாண்டிடுனுமே — கிரேக்கமாவீரன் அலெக்சாண்டர் இந்தியா வரையில் வந்தானுமே என்பதிலிருந்து பற்பல விஷயங்களைக் கற்கிறான். 'இப்படிக் கற்பதால் என்ன பயன்?' என்று கேட்டார் ராம்மாராமத்து மந்திரி இராமநாதபுரம் மாஜி ராஜா! கிரேக்க சரிதம், ரோமாபுரியின் வரலாறு—இதையெல்லாம், இங்கேயிருக்கிற மாணவர்கள், எதற்காகப் படிக்கவேண்டுமோ எனக்குத் தெரியவில்லை, என்றாராம்! நல்லவேளை—படிக்கவேண்டும் என்பதே எதற்காக என்று கேட்காமல், இவைகளை எதற்காகப் படிப்பது என்று கேட்டிருப்பது காண ஒருவகையில் மகிழ்கிறோம்! ஏழைகளுக்கேன் படிப்பு என்று முடிவு செய்த ஆச்சாரியாரின் மந்திரி சபையில் அங்கம் வகித்தவர் இவர்!

"ஆரியமாம் திராவிடமாம்!! அது ஒரு கலாச்சாரமாம்—இது வேறொரு கலாச்சாரமாம். இப்படி யெல்லாம் சரித ஆசிரியர்கள் எழுதிவிட்டுப்போய் விட்டார்கள். இதைப் படிக்கும் நம்முடைய பிள்ளைகளும் நம்பிக் கெட்டுப்போகிறார்கள்" என்று ஒருமுறை ஆச்சாரியாரும் வெகுவாக, நொந்துகொண்டார்! அவரைப்போல நொந்துகொள்ளும் சுபாவத்தினர் பலருண்டு!!

என்ன செய்வது! சரிதம் பேசுகிறதே—அதைக் காட்டியல்லவா, விழிப்புக்கொண்ட மக்கள் ஏதேதோ பேசி, வாயை அடைக்கிறார்கள். அதனால், சரித்திரத்தின்மீதே ஆச்சாரியருக்கு எரிச்சல் வருகிறது!

இராமநாதபுரம் 'மாஜி'க்கு சரிதம்மீது எரிச்சலில்லை—ஆனால், சரிதம் இப்படித்தானிருக்க வேண்டும் என்கிறார்—வெள்ளையன் வெளியேறுகிறான்! செங்கோட்டையில்கொடி ஏறுகிறது! பண்டிதருக்குப் பராக்குக் கூறுகின்றனர்! பல மாகாணங்களிலும், புதுப் புது மந்திரிகள் பவனி வருகிறார்கள்! அதிலே ஒருவராக இராமநாதபுரம் மாஜி ராஜாவும் இருக்கிறார்!—சரிதம் இப்படி இருந்துவிட்டால், திருப்தி உண்டாகும் போலும், அவருக்கு. கிரேக்க சரிதம், ஏனாம்!ரோமாபுரி அரசியல் எதற்காகவாம்!—கேட்கிறார்கள், பலர். உண்மையில், சீரழிந்துபோன சாம்ராஜ்யங்களின் புழுதி மேடுகளிலே புதைந்தது போக மிஞ்சிய பற்பல அறிவுக் கருவூலங்கள்தான், இன்று உலகையே, உன்னதபுரியாக்குகின்றன. அலெக்சாண்டிரியா நகரம்—ஒருபோது, விஞ்ஞானக் கூடாரமாயிருந்தது! எதென்ஸ் நகரம், இன்று வளர்ந்திருக்கும்எழுச்சிக் கருத்துக்களுக்குப் பிறப்பிடம்! ரோம்—அரசும், சட்டமும் இன்னும் பாராட்டப்படுகின்றன!

ஏதோ, ஒரு எண்ணம் மின்னல்போலத் தோன்றுகிறது—

மந்திரிகளுக்கு. பேசியும்விடு கிறார்கள்-சட்டமும் செய்துவிடு கிறார்கள்.

வெள்ளையனின் கல்விமுறை, வெகு சிலாக்கியம்! அதுவே, முடிவு!-எனக் கூறவில்லை, நாம்.

ஆனால், சிலாக்கியமான கல்வி முறையைச் செய்யப்போவதாகச் சொல்லுகின்றவர்கள், அதை விட மோசமாகவல்லவா, பாட திட்டங்களையும், படிப்பு முறை களையும் கெடுக்கிறார்கள்.

பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்த படிப்பின் 'தரத்துக்கும்' இப்போதுள்ள படிப்பின் 'தரத் துக்கும்' இடையிலுள்ள தார தம்யம்—எவருக்கும் புரியும்!

ஆள்பவர்கள்—அதிகாரிகள் - அறிஞர்கள்-அகில உலகமேதை கள் படித்துக் கற்றது பழைய கல்விமுறையில்தான். அப்படிப் படித்ததால்தான், இன்று அவர் கள் அறிஞர்களாகவும், ஆள்பவர் களாகவும் இருக்கிறார்கள்.

சரிதம், உலகியல், பொருளி யல்—ஏனைய நூல் அறிவு—எல் லாவற்றையும் இவர்கள் கற்றது ஆங்கில மொழியின் மூலமாகும்.

ஆனால் அந்த மொழியறிவு, படிப்படியாக நமது மாணவர் களுக்குக் குறைக்கப்பட்டே வந்து இப்போது அடியோடு அழிக்கும் முயற்சியும் நடை பெற்றுவருகிறது.

அப்படி அழிக்க விரும்பு வோர், ஆங்கிலத்தின் இடத்தை 'இந்தி'க்குத் தரத் துடிக்கிறார் கள்.

ஆங்கிலத்தின் வளர்ச்சியால், தமிழுக்கு, ஓரளவு குந்தகம் உண்டாயிற்று என்பது உண் மையே, அது,குந்தகம் ஒன்றைத் தான் செய்தது! ஆனால், இந்தி யோ, தாய்மொழியின் குரல் வளையையே நெரிக்கத் துடிக் கிறது!

சில ஆண்டுகளுக்கு முன்பு வரையில் ஐந்தாவது உயர்நிலை வகுப்பிலே 'விருப்ப பாடம்' என்று ஒன்று இருக்கும்-பௌ தீகம், ரசாயனம், கணக்கு, 'டைப்ரைடிங்' குறுக்கெழுத்து, தாவரப் பிரிவு—இப்படி! கல்லூ ரிக்குச் சென்று கலைபயில்வோ ருக்கு, வசதியாகவும், செல்ல முடியாதோர் ஏதாவது ஒரு வேலைக்குப் போகவும் வசதியாக இருந்தது.

இப்போது அதெல்லாம் விரட் டப்பட்டு, புதுப்புது முறைகள்! புதுமை மலர்ந்துள்ளதா! எனின் 'தரம்' குறைவதுதான் தெரி கிறது, 'எங்கும்'!

இல்லையென்றால், 'சர்வீஸ் கமி ஷன்' நடத்தும் பரீட்சையில்— அக்பர் என்பது ஒரு மலை; ஆபி ரிக்கா என்பது இங்கிலாந்தின் தலை நகரம்; ஐசனோவர், ரஷ்யா வின் தலைவர்; அரபுக் கடல், ஆஸ்திரேலியாவுக் கருகில் இருக் கிறது—என்று எழுதுவார்கள்? கமிஷன், இவைகளைப் பிரசுரிக்

தும்போது, 'ஹாஸ்யமா' வருகிறது! கண்ணீரல்லவோ கிளம்புகிறது—எதிர்காலம் எத்தகைய இருட்குகைக்குள் இழுத்துச் செல்லப்படுகிறது, என்பதை நினைக்கும்போது.

சென்னை கவர்னர் பிரகாசா' அந்த ஆபத்தை உணருகிறார், என்று கருதவேண்டி இருக்கிறது.

அவர், அரசின் தலைவர்! ஆயினும் வெளிப்படையாகக் கூறுகிறார், "நான் சர்க்காருடன் சம்பந்தம் வைத்திருப்பவன் என்றாலும், கல்வித் துறையைப் பொறுத்த அளவில், சர்க்காரின் தலையீடுகள் இருக்கக் கூடாது என்பதே என்னுடைய சொந்தக் கருத்து," என்று கூறுகிறார். இப்படிக்கூறும் இவர் இதனை, எதிலும் கையெழுத்து வாங்கும் 'கனம்'களிடமன்றோ கூறி இந்த நிலையை மாற்ற முயல வேண்டும்!

—"திராவிடநாடு"


**"ஆரம்பக் கல்வி ஆபீஸ்"**

*

**94–95, புதுத்தெரு, மண்ணடி சென்னை–1.**

*

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–8

ரிகார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–0

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–0

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1–0

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–0

Form of Certificate of Income.
வருமான நற் சாட்சி பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–0
(தபால் செலவு உட்பட)

*

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# உங்களுக்குத் தெரியுமா ?

(எஸ். முத்து வீரப்பா : தலைமை ஆசிரியர்,
ராம ; ராமசாமி செட்டியார் உயர்தர ஆரம்பப்பள்ளி,
நடராஜபுரம்.)

1. சென்னை மாகாணத்தில் எத்தனை கிராமங்கள் இருக்கின்றன ?

34800 கிராமங்கள்

2. மேட்டூர் அணை கட்ட எவ்வளவு ரூபாய் செலவாகியிருக்கிறது ?

4,80,00000 ரூபாய்கள்

3. சென்னை இராச்சியத்தில் உள்ள ஆண்கள் எத்தனை? பெண்கள் எத்தனை ?

ஆண்கள் சுமார் 24557200 பேர்கள்.

பெண்கள் சுமார் 24784700 பேர்கள்.

4. ரவீந்திரநாத தாகூர் எந்த வருஷம் பிறந்தார் ? எப்பொழுது மறைந்தார் ? எந்த வருஷம் நோபல் பரிசு கிடைத்தது ? அவர் எழுதிய எந்தப் புத்தகத்திற்காக நோபல் பரிசு அளிக்கப்பட்டது ?

1861–ம் வருஷம் பிறந்தார்.

1941–ம் வருஷம் மறைந்தார்.

1913–ம் வருஷம் நோபல் பரிசு கிடைத்தது.

அவர் எழுதிய "கீதாஞ்சலி" என்ற அருமையான புத்தகத்திற்காக அளிக்கப்பட்டது.

5. தாஜ்மஹால் எப்பொழுது கட்டி முடிக்கப்பட்டது ?

30–6–1645 இல் கட்டி முடிக்கப்பட்டது.

6. நேருஜி எந்த ஊரில் பிறந்தார் ? அவரது தாய்மொழி யாது ?

அலகாபாத்தில் ஹிந்துஸ்தானி

7. உலகத்தில் உள்ள ஏழு அதிசயங்கள் யாவை?

1. ஈஜிப்தில் இருக்கும் பிரமிட் கோபுரங்கள்.
2. பாபிலோனில் இருக்கும் தொங்கும் தோட்டம்.
3. இந்தியாவிலுள்ள டாஜ்மஹால்
4. இம்பூஸில் உள்ள டயனு கோயில்.
5. ரோட்ஸ் தீவிலுள்ள மிகப் பெரிய சிலை.
6. ஒலிம்பிக் ஜுபிடரின் சிலை.
7. அலெக்ஸாண்டிரியாவில் உள்ள "லைட் ஹவுஸ்"

8. நேத்தாஜியின் தாய் தந்தையரின் பெயர் என்ன?

அன்னை பெயர் பிரபாவதி தேவி.

தந்தை பெயர் ஜானகி நாத் போஸ்.

9. உலகத்து ஏரிகளில் மிகப் பெரியது எது?

"காஸ்பியன் கடல்." கடல் என்று நினைக்காதே! நான்கு பக்கங்களிலும் நிலத்தால் சூழப்பட்ட ஏரிதான்.

10. பர்மாவின் விஸ்தீரணம் என்ன? ஜனத்தொகை என்ன? தலைநகர் எது? தலைநகரில் வாழும் ஜனத்தொகை என்ன?

பர்மாவின் விஸ்தீரணம் 262000 சதுர மைல்கள்.

ஜனத்தொகை 17000000 பேர்கள்.

தலைநகர் ரங்கூன்.

தலைநகரில் வசிப்பவர்கள் 400000 பேர்கள்.

11. சங்கீத வாத்தியங்களில் காதுக்கு இனிமையான வாத்தியங்கள் இரண்டைக் கூறு?

1. புல்லாங்குழல். 2. வீணை — இவ்விரண்டும் தான் இனிமையான வாத்தியங்கள்.

12. காந்தித் தாத்தா வட்டமேஜை மாநாட்டிற்குச் சென்றது (லண்டன்) எந்த வருஷம்?

1932-ம் வருஷம்.

13. உலகத்திலேயே எரிமலைகள் எங்கு அதிகம்? (ஜப்பானில்தான் அதிகம்)

14. பேனாவை முதன்முதலில் கண்டு பிடித்தவர் யார்?

(வாட்டர்மன் என்ற அமெரிக்கர்)

15. ஜின்னா பிறந்த ஊர் எது?

(கராச்சி)

16. ஜப்பானில் சினிமாக் கொட்டகைகள் எத்தனை இருக்கின்றன?

(ஜப்பானில் 16200 கொட்டகைகள் இருக்கின்றன.)

17. கடிகாரங்கள் எங்கே அதிகமாகச் செய்கிறார்கள்?

ஸ்விட்ஜர்லாந்து தேசத்தில்)

18. தற்பொழுது சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரியின் பெயர் என்ன? கல்வி மந்திரியின் பெயர் என்ன?

(பிரதம மந்திரி [illegible]ார்.

கல்வி மந்திரி திரு C. சுப்பிரமணியம்)

19. காந்திஜியை முதன் முதல் சந்தித்துப் பேசிய கவர்னர் ஜெனரல் யார்?

(ரீடிங் பிரபு)

20. இந்திய சர்க்கார் பிரிட்டனிடமிருந்து வாங்கிய யுத்தக் கப்பலின் பெயர் என்ன?

(அதன் பழய பெயர் "அச்சலிஸ்" இப்பொழுது "டில்லி" என்று இந்திய சர்க்கார் பெயர் வைத்திருக்கிறார்கள்.)

21. டெலிபோனைக் கண்டு பிடித்தவர் யார்?

("பெல்" என்பவர் 1876-ம் வருஷம் கண்டு பிடித்தார் இவர் அமெரிக்கா தேசத்தவர்,)

22. இந்தியாவில் தபால் போக்குவரத்து எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?

(1774-ம் வருஷம)

23. மண்ணுலகில் மனிதனாய்ப் பிறந்து மாண்புடன் ஆசிரியத் தொழில் புரிந்து, ஆகஸ்டு கலவரத்தில் அன்புடன் பங்கு கொண்டு, உண்மைத் தியாகி என ஊரார் நினைக்கும்படி நடித்து, உலகம் புகழும் அன்புத் தெய்வத்தை அக்ரமமாக சுட்டு வீழ்த்திய அறிவிலி

# புத்தகப் பூங்கா

**சென்னை மாநகர் :**—[ஆசிரியர் மா. சு. சம்பந்தன். விலை ரூ. 2–0–0 கிடைக்குமிடம்: பாரி நிலையம். 59, பிராட்வே, சென்னை 1.]

சென்னை மாநகரம் தமிழ் நாட்டின் இக் காலத் தலைநகரம். வளமும் வாய்ப்பும் நிறைந்து, அழகும் இனிமையும் செறிந்து, தெளிவும் திறமும் மிகுந்து நிற்கும் நகரம். ஏறத்தாழப் பதினைந்து இலட்சம் மக்களைத் தன்னகத்தே தாங்கி அனைவருக்கும் உணவும் உறையுளும் கொடுத்து அன்புடன் ஆதரித்து வரும் தனிச் சிறப்பு வாய்ந்த நகரம். இத்தகைய நகரம் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு சின்னஞ் சிறியதோர் குப்பமாகத்தான் இருந்தது. சிறியதோர் குப்பம், 300 ஆண்டுகள் என்கிற இடைவெளியைக் கடந்து இன்றைய தினம் சீரும் சிறப்புமிக்க பெரியதோர் நகரமாக ஒளி வீசுகிறது என்றால், எப்படி ஏற்பட்டது இப்படி ஒரு மாற்றம்? யார் யார் இதன் வளர்ச்சிக்கு வழி கோலினர்? எவ்வெவ்வகையான ஆட்சிகள் இந் நகரத்தில் இதுவரை இருந்திருக்கின்றன? என்பதையெல்லாம் இந்தப் புத்தகம் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. ஏஜண்டுகள் ஆட்சி, கவர்னர் ஆட்சி, நேரடி யாட்சி, இரட்டை யாட்சி, மாகாணத் தன்னாட்சி, ஆலோசகர் ஆட்சி, விடுதலை விழாவுக்குப் பிறகு உள்ள ஆட்சி, ஒவ்வொன்றின்போதும் சென்னையில் ஏற்பட்ட மாறுதல்கள் நிரல் நிரலே விளக்கப்பட்டுள்ளன. சென்னை நகரத்தின் வாணிபம், தொழில்கள், போக்குவரத்து, குடிவளம், தண்ணீர் வசதி, மருத்துவ வசதி முதலிய ஒவ்வொரு துறையின் முன்னாள் நிலையும், இடைநாள் வளர்ச்சியும், இந்நாள் சிறப்பும் தனித்தனியே விளக்கப்பட்டிருக்கின்றன. சட்டம், பாதுகாப்பு, சிறை, கல்வி, நகராட்சி மன்றம் முதலிய எந்தப் பகுதியையும் இந் நூலாசிரியர் தெளிவாக்கத் தவறவில்லை. சென்னையின் முற்கால வரலாற்றை அறியவும் இக்காலச் செழிப்பை உணரவும் சிறந்ததோர் கருவி இந்த ஏழிலேடு. கோட்டையும் கொடி மரமும், போர் நினைவு மண்டபம், மெரினா சாலை, கடற்கரை முதல் வீதி முதலான 32 படங்கள் இணைக்கப்பட்டு, கலங்கரை விளக்கத்தை அட்டைப் படமாகக் கொண்டு, அழகான முறையில் அச்சிடப்பட்டுள்ள இந்தச் சுவடியில், சென்னையைப் பற்றிய எல்லாப் பொருள்களும் இருக்கின்றன. இதன் கண் இல்லாப் பொருள் சென்னையில் ஏதும் இல்லை என்றே சொல்லி விடலாம். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மிகவும் பயன் படக்கூடிய ஏடு. நூல் நிலையங்கள் ஒவ்வொன்றிலும் தவறாமல் இடம்பெற வேண்டிய தகுதி படைத்த புத்தகம்.

# சென்னை மாநில எயிடட் பள்ளி மானேஜர்கள் சங்கம்

## கல்வியிலாகா அரசாங்கக் காரியதரிசியுடன் பேட்டி

7-10-55 மாலை அரசாங்கக் காரியதரிசியைப் பேட்டி கண்டு 1-10-55-ல் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் நகல் ஒன்று கொடுக்கப்பட்டது. 19–5–55-ல் அரசாங்கத்தார் தங்கள் 926 எண்ணுள்ள G. O. வில் எயிடட் பாடசாலைகளுக்கு, (Full Fee) முழுச் சம்பள நஷ்ட ஈடு கொடுப்பதாகக் குறிப்பிட்டிருந்ததால், அதை நம்பி அதன்படி பெருவாரியான பிள்ளைகளிடமிருந்து கடந்த ஐந்து மாதங்களாக சம்பளம் வசூலிக்கப்படவில்லையென்றும், பாடசாலைகளுக்கு வேண்டிய செலவுகளை செய்துவிட்ட பிறகு திடீரென்று செப்டம்பர் மாதத்தில் பிள்ளைகளுக்கு 4 அணா, 6 அணா, 8 அணா விதம்தான் அரசாங்கம் நஷ்ட ஈடு கொடுக்கும் என்ற அரசாங்க உத்தரவைப் பார்க்க, பள்ளி மானேஜர்கள் ஏமாற்றமடைந்ததுமல்லாமல் பள்ளிகளை இந்தக் குறைந்த சம்பள விகிதத்தில் நடத்த முடியுமா? அல்லது மூடிவிடத்தான் வேண்டுமா என்ற யோசனையில் மானேஜர்கள் இருப்பதாகக் காரியதரிசியிடம் நிலைமை விளக்கப்பட்டது.

அதற்கு காரியதரிசி அவர்கள், பள்ளிக்கூடங்களை மூடிவிடுவது சுலபமான காரியமென்றும் ஆனால் நீங்கள் மூடிவிட்டால் உங்கள் பாடசாலைகளை அரசாங்கமோ, முனிசிபாலிடிகளோ எடுத்து நடத்த போதிய பணவசதியைப் பற்றியும், மற்ற சௌகரியங்களைப் பற்றியும் அரசாங்கம் யோசிக்கவேண்டிய கட்டத்தில், இந்தப் புதிய அரசாங்க உத்தரவு இருசாராரையும் கொண்டுவந்து நிறுத்தி இருக்கிறதென்றும், இதைப்பற்றி புள்ளி விவரங்களுடன், டைரக்டருடன் ஆலோசனை செய்து நாட்டின் கல்வி முன்னேற்றத்தைக் கருதி நல்லதோர் முடிவுக்குக் கூடிய சீக்கிரத்தில் வருவதாகவும், அதற்குள் இப்போது பாதிக்கப்பட்டுள்ள சுமார் 1000, எயிடட் பள்ளிகளுக்கு உடனடியாக ஓர் குறிப்பிட்ட தொகை (Advance) முன்பணமாக டைரக்டர் கொடுக்கும்படி ஏற்பாடு செய்வதாகவும் வாக்களித்தார்.

### டைரக்டருடன் பேட்டி (7-10-55)

அன்று மாலையே கல்வியிலாகா டைரக்டர் திரு. N. D. சுந்தரவடிவேலு அவர்களைப் பேட்டி கண்டு சங்கத்தில் நிறைவேற்றிய

தீர்மானங்களைக் கொடுத்து, மானேஜர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டத்தையும், நஷ்டத்தையும் எடுத்து விளக்கப்பட்டது.

அதற்கு டைரக்டர் அவர்கள் எயிடட் பாடசாலைகளில் ஒரே விதமான சம்பள விகிதாசாரமில்லாமல் (Uniform Rates) ஒவ்வொரு பாடசாலையில் ஒவ்வொரு விதமான சம்பளம் வசூலிக்கப்படுகிறதென்றும், அதைத் தடுத்துப் பாடசாலைக்குப்பாடசாலை வித்தியாசமின்றி ஒரேவிதமாக சம்பள வசூல் இருக்கவேண்டுமென்று அரசாங்கம் கருதுவதாகவும், மாதாமாதம் ஆசிரியர்களுக்குண்டான கிராண்டையும். அலவன்சையும் அரசாங்கம் கொடுத்துவிடுவதால் மற்றச் செலவுகளுக்கு தற்போது செலவிட்டுள்ள G. O. ல் கண்ட (Rates) சம்பள விகிதம் எயிடட் பாடசாலைகளை நடத்தப் போதுமானதென்று அரசாங்கம் கருதுவதாகவும், தற்போது மானேஜர்கள் புதிய சம்பள விகிதம் கொடுக்கப்பட்டால் பாடசாலைகளை நடத்த முடியாதென்று கருதுவதால், மறுபடியும் அரசாங்கத்துடன் கலந்து யோசித்து தன்னாலான உதவியை எயிடட் பாடசாலைகளுக்கு செய்வதாகவும் வாக்களித்தார்.

## கல்வி மந்திரியுடன் பேட்டி

13-10-55 அன்று சங்கத்தின் தீர்மானங்கள் கல்வி மந்திரியிடம் கொடுக்கப்பட்டன. கல்வி மந்திரியார் எயிடட் பள்ளிகளில் அதிகமாக சம்பளம் வசூலிக்கப்படுகிறதென்றும், அந்த அளவிற்கு நஷ்ட ஈடு கொடுக்க அரசாங்கத்தினிடம் பணவசதி இல்லையென்றும், எல்லா எயிடட் பாடசாலைகளுக்கும் ஒரேவிகிதமான சம்பள விகிதம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்பது (Uniform Rates) அரசாங்க நோக்கமென்றும் கூறினார்.

அதை விளக்கி தற்போது அரசாங்கம் வெளியிட்டுள்ள சம்பள விகிதம், மானேஜர்கள் வசூலித்து வரும் சம்பளத் தொகையில் 3-ல் ஒரு பங்கு ஆகிறதென்றும் இரண்டு பங்கு நஷ்டம் ஏற்படுகிறதென்றும், அப்படி நஷ்டம் ஏற்பட்டால் எயிடட் பாடசாலைகள் முன்மாதிரி பிள்ளைகளை சேகரித்து பாடசாலையை விருத்தி செய்து நல்ல முறையில் நடத்தத் தடைபடுமென்றும், சுருங்கக் கூறவேண்டுமானால் நாளடைவில் எயிடட் பாடசாலைகளை மூடப்பட வேண்டிய நிலைமை ஏற்படுமென்றும், ஆதலால் அந்தந்த பாடசாலை விகிதத்திலுள்ள விகிதப்படி சம்பள நஷ்ட ஈடு கொடுககப்பட வேண்டுமென்று விளக்கிக் காட்டப்பட்டது. இதை கனம் மந்திரியார் பரிசிலனை செய்வதாக வாக்களித்தார்.

# சம்பள நஷ்டஈடும் அரசாங்கமும்

நமது சென்னை மாநிலத்தில் உள்ள சுமார் 21 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகளில் 11 ஆயிரம் பாடசாலைகள் தனிப்பட்ட நிர்வாகிகளால் நடத்தப்படுபவை. அதில் சுமார் 1000 பாடசாலைகள் சம்பள வசூல் செய்து நடத்தப்படுபவை. இவை பெரும்பாலும், சென்னை, மதுரை, திருச்சி, தஞ்சை போன்ற முக்கிய நகரங்களில் நடத்தப்படுபவை. இங்கெல்லாம் கட்டட வாடகை, ஆசிரியர்கள் சம்பள உயர்வு, சிப்பந்திகளின் செலவு, மற்ற செலவுகளெல்லாம் ஏறக்குறைய அரசாங்கம் ஆசிரியர்களுக்காகக் கொடுக்கும் ஸ்கேல் கிராண்ட் அளவிற்கு சம்பளம் வசூல் செய்யப்பட்டால்தான் பாடசாலைகளின் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறமுடியும்.

உதாரணமாக சராசரி 100 பிள்ளைகள் படிக்கும் சென்னையிலுள்ள ஓர் பாடசாலையை எடுத்துக் கொள்வோம்.

இந்தப் பாடசாலை, சம்பளம் கொடுக்க நல்ல வசதியுள்ள பெற்றோர்கள் வசிக்கும் இடத்தில் அமைந்திருப்பதாக வைத்துக் கொள்வோம்.

### சராசரி சம்பள வசூல்

| | பிள்ளைகள் | சம்பள விகிதம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1–ம் வகுப்பு | 20 | ரூ. 1 | 0 | 0 | = | 20 | 0 | 0 |
| 2–ம் ,, | 20 | ரூ. 1 | 4 | 0 | = | 25 | 0 | 0 |
| 3–ம் ,, | 20 | ரூ. 1 | 8 | 0 | = | 30 | 0 | 0 |
| 4–ம் ,, | 20 | ரூ. 1 | 12 | 0 | = | 35 | 0 | 0 |
| 5–ம் ,, | 20 | ரூ. 2 | 0 | 0 | = | 40 | 0 | 0 |
| | | | | | | ரூ. 150 | 0 | 0 |

### சர்க்கார் கொடுக்க இருக்கும் நஷ்டஈடு

| | பிள்ளைகள் | சம்பள விகிதம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1–ம் வகுப்பு | 20 | ரூ. 0 | 4 | 0 | = | 5 | 0 | 0 |
| 2–ம் ,, | 20 | ரூ. 0 | 6 | 0 | = | 7 | 8 | 0 |
| 3–ம் ,, | 20 | ரூ. 0 | 8 | 0 | = | 10 | 0 | 0 |
| 4–ம் ,, | 20 | ரூ. 0 | 10 | 0 | = | 12 | 8 | 0 |
| 5–ம் ,, | 20 | ரூ. 0 | 12 | 0 | = | 15 | 0 | 0 |
| | | | | | | ரூ. 50 | 0 | 0 |

அரசாங்கம் கொடுக்கும், கிராண்டையும், அலவன்ஸையும் இப் பாடசாலையில் 5 ஆசிரியர்களுக்கும் கொடுத்து விடுகிறோம். சம்பள வசூலிலிருந்து கீழ்கண்ட மாதச் செலவுகள் செய்யப்படுகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| கட்டிட வாடகை | ரூ. | 75 | 0 | 0 |
| 5 ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு | ரூ. | 10 | 0 | 0 |
| பிராவிடன்ட்பண்டு | ரூ. | 5 | 0 | 0 |
| Conductress (ஆயாள்) | ரூ. | 15 | 0 | 0 |
| பாடசாலை பெருக்க | ரூ. | 10 | 0 | 0 |
| Scavenger | ரூ. | 5 | 0 | 0 |
| கட்டடம் பழுது பார்க்க (வெள்ளையடிக்க) | ரூ. | 5 | 0 | 0 |
| Stationery | ரூ. | 2 | 0 | 0 |
| இதர செலவுகள் | ரூ. | 3 | 0 | 0 |
| | ரூ. | 130 | 0 | 0 |

மிச்சமிருப்பது 20 ரூபாய். இந்தத் தொகைதான் மானேஜர் பாடசாலையைக் கட்டிக்காத்து, ஆங்காங்குள்ள பெற்றோர்களைக் கண்டு, பிள்ளைகளை அனுப்ப தனிப்பட்ட முயற்சி எடுத்து, பாடசாலையை நல்ல முறையில் நடத்த எடுத்துக்கொள்ளும் சிரமத்திற்காக சிறு தொகை (Manager's allowance) இந்தத் தொகையும மானேஜர் எடுத்துக்கொள்வது அரசாங்கப் பணத்திலல்ல, பொதுமக்களிடமிருந்து வசூலிக்கும் சம்பளத் தொகையிலிருந்து. இந்தத் தொகையும், எல்லாப் பாடசாலைகளிலும் கிடைத்துவிடாது. சில பாடசாலைகளில், செல்வந்தர்கள் நிறைந்த, சென்னையிலுள்ள மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, தியாகராயநகர் போன்ற இடத்தில்தான் கொஞ்சம கிடைக்கும். தற்போதுள்ள 1000 எய்டட் பாடசாலைகளிலுமல்ல. நன்றாக வசூலிக்கப்படும் பாடசாலைகள் 100-க்கு 10 பாடசாலைகளுக்குமேல் நாட்டில் எந்தப் பகுதியிலும் கிடையாது. அப்படி வசூலிக்கப்பட்டாலும் சுமார் 500 பிள்ளைகள் படிக்கும் பாடசாலையின் மானேஜர் மாதம் 100 ரூபாய் சம்பள வசூலில் எடுத்துக் கொள்வதாக வைத்துக் கொள்வோம். அதற்கு அந்த மானேஜர் லாபத்திற்காக பாடசாலை நடத்துகிறார் என்று பொருள். அவர் அப் பாடசாலையின் கல்வி அதிகாரிகள் குறை கூறுவண்ணம், அவர்களுக்கு திருப்திகரமாக பல நஷ்ட, கஷ்டங்களுக்கு உட்பட்டு கட்டிக் காத்து வருவதற்குக் கொடுக்கப்படும் ஊதியம் என்றுதான் பொருள்.

மேற்குறித்த உதாரணத்திலிருந்து எய்டட் பாடசாலைகள் குறைந்த செலவில், திறமையாக பாடசாலைகளை நடத்தி அரசாங்கத்

திற்கு உதவி செய்யும் நோக்கத்துடன் மானேஜர்கள் பாடசாலைகளை நடத்துகிறாகளே தவிர லாபத்தை மட்டும் கருதியே அல்ல. ஆனால் சில கல்வி அதிகாரிகள் சில எய்டட் பாடசாலைகள் நல்ல முறையில் நடத்தப்படுவதைக் கண்டு லாபத்திற்காகத்தான் வியாபார முறையில் மானேஜர்கள் பள்ளிகளை நடத்துகிறார்கள் என்று பொறாமைப்பட்டு குறைகூறும் கண்ணோட்டத்துடன் எய்டட் பாடசாலைகளை குறை கூறி வருகிறார்கள். சிற்சில கல்வியதிகாரிகளிடத்தில் இத்தகைய மனப்பான்மையைக் காண மிக, மிக வருந்துகின்றோம்.

தற்போது கல்வி அதிகாரிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இருக்க வேண்டிய கவலையெல்லாம் நாட்டில் படிக்காத சுமார் 30 லட்சம் பிள்ளைகளை 10 ஆண்டுக்குள் எவ்விதம் நாட்டில் படிக்க வசதி செய்ய வேண்டுமென்பதில் இருக்கவேண்டுமே ஒழிய எய்டட் பாடசாலைகளை குறைகூறுவது அல்ல.

கடந்த 5 மாதங்களாக எய்டட் பள்ளிகள் சம்பளம் வசூலிக்கப்படாமல் பலவித தொல்லைகளுக்கு உட்பட்டிருக்கின்றன. ஆதலின் உடனடியாக கல்வி டைரக்டரும், அரசாங்கத்தினரும் புதிய G. O.வை ரத்துசெய்து முழுச் சம்பள நஷ்டஈட்டை உடனடியாக கொடுக்கும்படி, ஜில்லா கல்வி அதிகாரிகளுக்கு உத்தரவளிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

## ஓர் வேண்டுகோள்

நமது பத்திரிகையில் சம்பள நஷ்டஈட்டைப் பற்றிய தீர்மானங்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இதை ஜில்லா மானேஜர்கள் சங்கங்கள் ஆங்கிலத்திலுள்ள தீர்மானங்களை தங்கள் சங்கங்களில் கூட்டம் கூட்டி, தீர்மானங்களை டைப் அடித்து அல்லது தமிழில் எழுதி :

கனம் கல்வி மந்திரி (Minister for Education, D. P. I., Secretary to Government, Education Department) இவர்களுக்கு அனுப்பி வைத்து அதன் நகல் ஒன்றை மாகாண சங்கத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இதுவன்றி இப் புதிய உத்தரவால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு எய்டட் பாடசாலையும் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து தீர்மானங்களில் குறித்துள்ள சாராம்சத்தை சுருக்கி எழுதி முழு சம்பள நஷ்டஈட்டை அரசாங்கம் கொடுக்கத் தவறினால் இதுவரையில் நடத்தப்பட்ட பாடசாலை திறமையுடன் நடத்தப்பெற முடியாதென்றும் வற்புறுத்தி மனுக்கள் அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

குறைந்தது 500 மனுக்களாவது கல்வி மந்திரிக்கு அனுப்ப வேண்டும்.

அந்தந்த ஜில்லாவிலுள்ள M. L. A.க்களிடம் சென்று பாடசாலையின் நிலைமையை விளக்கி முழு நஷ்டஈடு எய்டட் பள்ளிகளுக்கு கொடுக்கும்படி கல்வி மந்திரிக்கு கடிதம் எழுதும்படி செய்ய வேண்டும். அடுத்த மாதத்திற்குள் நல்லதோர் முடிவிற்கு அரசாங்கம் வராவிட்டால் மானேஜர்கள் மாநாட்டைக் கூட்டி தக்க நடவடிக்கைகள் எடுக்க யோசிக்கப்பட்டு வருகிறது.

தலைவர்
**P. வீரராகவன்,**
எய்டட் பள்ளி மானேஜர்கள் சங்கம்

---

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்த்து அறப்போர் புரிந்து சிறைக்கோட்டம் நண்ணினர். ஈடு இணையற்ற ஓர் தமிழறிஞர் இங்ஙனம் தன் குடும்பத்தோடு அறப்போரில் ஈடுபட்டது கண்டு தமிழர் உள்ளம் அடங்காத களிப்புடன் துள்ளிக் குதித்தது. ஆட்சியாளரின் அஞ்சாத நெஞ்சத்திலும் அச்சம அலை அலையாய் எழுந்தது.

இந்தி எதிர்ப்புப் போர் மூள்வதற்கு முன்னுலேயே, 1937 லேயே, அறிஞர் மறைமலையடிகளார் "இந்தி பொது மொழியா?" என்னும் அரிய நூல் ஒன்றை வெளியிட்டார். இந்தி மிக அண்மைக் காலத்தே எழுந்த ஒரு கலவை மொழி என்பதும், வடமொழியின் வழி மொழியே இந்தி என்பதும், அது இலக்கண இலக்கிய வளம் சிறிதும் வளர்க்கப் பெறுதது என்பதும், அறிவு நூற்கலைகள் ஒரு சிலவேனும் தன்கண் அமைந்திராதது என்பதும், எவ்வாற்றுனும் பொது மொழியாதற்குரிய தகுதி அற்றது என்பதும், வளர்ந்து பெருகும் இந்திப் பயிற்சி தமிழர்க்குக் கேடு பயப்பது உறுதி என்பதும் பிறவும், ஆராய்ச்சி வழியாக, அசைக்கமுடியாத ஆதாரங்களுடன் அந் நூலில் நிலைநாட்டப்பட்டுள்ளன.

ஆரிய நாகரிகம் வேறு, திராவிட நாகரிகம் வேறு என்பதையும் ஆரிய நாகரிகத்தைவிட திராவிட நாகரிகமே உயர்ந்ததும், முந்தியதுமாகும் என்பதையும், ஆரியர்கள் திராவிடரிடமிருந்து பற்பல கருத்

துக்களையும் கொள்கைகளையும் சொற்களையும் கடன் வாங்கியிருக்கின்றனர் என்பதையும், திராவிடரின் செந்தமிழ் , ஆரியரின் வடமொழியைவிட மிக உயர்ந்தது என்பதையும், அடிகளார், 'வேளாளர் நாகரிகம்' முதலிய தன்னுடைய பல புத்தகங்களில் மிக விளக்கமாக எழுதி, திராவிட நாகரிகத்தின் தனிச் சிறப்பை அனைவரும் ஒப்புக்கொள்ளும்படி செய்தது, அவர் ஆற்றிய ஒப்பற்ற பணிகளில் மிகச்சிறந்த ஒன்றாகும்.

5000-க்கு மேற்பட்ட ஆங்கிலம்—வடமொழி—தமிழ்ப் புத்தகங்கள் கொண்ட அருமையான நூல் நிலையம் ஒன்றை அவர் வைத்திருந்தார். அந்தப் புத்தகங்களை அவர் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றிய சிறப்பை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

அவருடைய கையெழுத்து — அதன் எழிலை என்னென்று இயம்புவது—பார்த்தால் கண்களில் ஒற்றிக்கொள்ளலாம் போல

இருக்கும்—அவ்வளவு அழகு! அவ்வளவு இனிமை! முத்து முத்தாக, அச்சுக் கோத்ததுபோல, அவ்வளவு அழகாக எழுத வல்ல எழுத்தாளர் இன்னொருவர் உண்டா என்பது மிகுந்த ஐயத்திற்குரியதாகும்.

அறிவுக்கடல் என்று, அந்த அறிவுலக ஒளிவிளக்கு, தன்னுடைய பத்திரிகைக்குப் பெயர் சூட்டிற்று. அவருடைய பத்திரிகைக்கு அந்தப் பெயர் பொருந்துமோ இல்லையோ நாமறியோம். ஆனால் அவருக்கு அந்தப் பெயர் பொருந்தும். ஆம்! அவர் ஓர் அறிவுக்கடல்!

இதனைத் தமிழகம் மிக நன்றாக அறிந்துகொண்டிருக்கிறது. அறிந்து கொண்டிருப்பதால்தான், சென்ற மாதம் தமிழகத்தில், பற்பல இடங்களிலும், அடிகளாரின் நினைவு நாள், மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது.

வாழ்க மறைமலையடிகளாரின் பெயர்! ஏன்? தமிழகம் வாழ! வாழ்க தமிழகம்! ஏன்? பற்பல மறைமலையடிகள் தோன்ற!!

★

Edited, Printed and Published by P. Veeraraghavan
at the 'Venkatesan Press'
94/95 New St., Mannady, Madras.—1

## வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 4 0 | 25 | 19–5–'54 |
| இரண்டாம் வகுப்பு | 0 5 0 | 25 | 19–5–'54 |
| மூன்றாம் வகுப்பு | 0 8 0 | 25 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 9 0 | 25 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 10 0 | 25 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிக்கு ரூ. 1—2—0 அனுப்பவும்.

## கதைப் புத்தகங்கள்

(S. S. அருணகிரிநாதர்)

| | | | |
|---|---|---|---|
| **பாலர் நல்ல கதைகள்** | | | |
| நான்காம் வகுப்பு | 0 5 0 | 28 | 19–5–'54 |
| **பாலர் கதா போதினி** | | | |
| ஐந்தாம் வகுப்பு | 0 5 0 | 59 | 19–5–'54 |

இந்த இரண்டு புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 0–5–0 அனுப்பவும்.

## இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

(M. விவேகானந்தா, B. Sc. L. T.)

| | | | |
|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 5 0 | ... | ... |
| நான்காம் வகுப்பு | 0 7 0 | 18 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 8 0 | 18 | 19–5–'54 |

இந்த மூன்று புத்தகங்கள் வேண்டுவோர் ரூ. 0–10–0 அனுப்பவும்.

## புதிய தேச ஆட்சி முறை

(D. சிவசங்கரராவ், B.A.,L.T.)

| | | | |
|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 5 0 | 11 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 7 0 | 8 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 8 0 | 8 | 19–5–'54 |

இந்த மூன்று புத்தகங்களை மாதிரி பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 0–10–0 அனுப்பவும்.

Regd No. M 5018.

## புதுமுறை சங்கக் கணிதம்

K. வீராசாமி, B.A., B.T.

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 | 8 | 0 | 14 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 10 | 0 | 14 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 12 | 0 | 14 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–15–0 அனுப்பவும்.

## நம் நாட்டு வரலாறு

M. தக்ஷிணாமூர்த்தி, B. A., B. T.,
T. S. உமாபதி, M. A., L. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 | 5 | 0 | 11 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 7 | 0 | 8 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 9 | 0 | 10 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–11–0 அனுப்பவும்.

## தமிழ் இலக்கணம்

T. S. உமாபதி, M.A., L.T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4, 5–வது வகுப்புகளுக்கு | 0 | 5 | 0 | 8 | 4–5–'55 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 0–2–0 அனுப்பவும்.

## சிறுவர் பூகோளம் (Tamil)

T. S. உமாபதி, M. A., L. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 | 5 | 0 | 13 | 19–5–'54 |

V. K. சேஷாத்திரி, B. A., B. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 | 7 | 0 | 12 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 10 | 0 | 12 | 19–5–'55 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 12 | 0 | 12 | 19–5–'54 |

மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 1–1–0 அனுப்பவும்.

**Mother India English Reader Primer - I** 0–5–0

மாதிரிப் பிரதிகளுக்கு ரூ. 0–2–0 அனுப்பவும்.

Printed at the Venkatesan Press, Madras—1.